முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசு 4 | 19—7—57 வெள்ளி | ஒலி 13

சென்றதை மறந்தார்கள்!



Best copy available

★ எருதும் ஏர் பிடிக்கும், ஏற்றதொரு காலம் வந்தால்! ★



சென்னை நிதியமைச்சர் சுப்பிரமணியம் திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கி பத்து 'ஆண்டு' சமர்தான ஒப்பந்தம் வேண்டுமென்று பேசிய நேரத்தில் 'சுதேச மித்திரன்' ஏடு ஜூலை 6-ம் தேதியன்று கேலிச் சித்திரமொன்று வெளியிட்டிருந்தது.

அமைச்சர் சுப்பிரமணியம் நிலத்தை உழுது பண்படுத்தும் ஆக்க வேலை நோக்கத்துடன் கலப்பையைக் கையிலே பிடித்தபடி நிற்கிறார்.

தூரத்திலே 'எதிர்க் கட்சிகள்' 'தொழிலாளர்கள்'—என்கிற இரு எருதுகள் கலப்பையிலே கழுத்தை நீட்டி ஒத்துழைப்பு தராமல் எட்டி நிற்கின்றன.

—இந்த கேலிச் சித்திரத்திற்குக் கீழே இந்த வாசகங்கள்;

"பத்து வருஷ காலத்திற்கு தொழில்—அரசியல் துறைகளில் தகராறின்றி ஒத்துழைக்குமாறு சென்னை நிதி மந்திரி எதிர்க் கட்சிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்!"

—அதாவது சுப்பிரமணியனார் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கட்சியின் திட்டங்கள் வெற்றி பெற எதிர்க் கட்சிகளும், தொழிலாளர்களும் ஒத்துழைப்பதில்லையாம்!

—இதுதான் 'மித்திரன்' கூற்று!

—இதற்கு நல்ல முறையில் விளக்கம் பெறுவதற்கு முன்னதாக நாம் சில சந்தேகங்களைத் தெரிந்தெறிய வேண்டும்.

நிதியமைச்சர் உழும் பாவனையில் நிற்கிறாரே; அந்த நிலம் யாருக்குச் சொந்தமானது? உரிமையுடையவர்களை ஏமாற்றிவிட்டு உழுகிறாரா? அல்லது அவர்களது அனுமதி பெற்று அந்த வேலையில் இறங்கியிருக்கிறாரா?

இப்போது கலப்பை பிடித்திருக்கிற நிதியமைச்சர் உண்மையிலேயே தொண்டு செய்ய வேண்டும்; பணிபுரிய வேண்டுமென்கிற எண்ணத்தினால் உந்தப்பட்டவரா? அல்லது அவரது ஆசான் ஆச்சாரியார் முன்பு வன மகோத்சவ காலத்தில் கையில் கலப்பையுடன் படமெடுத்துக் கொண்டதைப் போல, இவரும் இப்போது வெறும் பொழுது போக்கிற்காக மட்டும் இந்தப் பணியில் மூழ்ந்திருக்கிறாரா?

—இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதோடு மித்திரன் குறிப்பிடும் 'ஒத்துழைப்பு' என்கிற வார்த்தைக்கும் விளக்கம் தேவை.

ஒத்துழைப்பு—எந்த நேரத்திலே கேட்கப்படுகிறது?

வலுக் கட்டாயமாகக் கட்டழகியின் கழுத்திலே தாலி கட்டிய கயவனொருவன் சடங்குகள் முடிந்த பிறகு கண்ணீர் வழிய நிற்கும் காரிகையைப் பார்த்து, "என் வாழ்க்கை சுகப்பட உன் ஒத்துழைப்பு தேவை!" என்று கூப்பாடு போடுவதிலே என்ன பொருள் இருக்க முடியும்?

அதே கதையைத்தான் நினைவுறுத்துகிறது, எதிர்க் கட்சியினரைப் பார்த்து சுப்பிரமணியனார் உங்கள் ஒத்துழைப்பு தேவை என்று அழைப்பு விடுப்பதும்!

யாருடைய ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்று தெரிகிறதோ அவர்களைச் சிறிதும் கலக்கவில்லை, திட்டங்களை வகுத்த நேரத்தில்!

இப்போது திட்டம் சரிவர நிறைவேறவில்லை. அதன் 'ஓட்டை உடைசல்கள்' உலகெங்கும் தெரிகின்றன; அதை மறைப்பதற்குத்தான் அமைச்சர் கூப்பாடு போடுகிறார்!

தனக்குச் சொந்தமான நிலத்திலே மாடுகளைத் தலைகீழாக நிறுத்தி அமைச்சர் விவசாயம் செய்தால்கூட நாம் கவலைப்பட்டிருக்க மாட்டோம்.

நிலம் நாட்டு மக்களுக்குச் சொந்தமானது!

திட்டங்கள் தீட்டுவதற்கு முன்னால் அமைச்சர் சம்பந்தப்பட்டவர்களை நிச்சயம் கலந்திருக்க வேண்டும்!

ஏன் அவர் அப்படிக் கலக்கவில்லை?

அமைச்சரது நினைவெல்லாம் "எருதுகள் தானே அவை! அவைகளுக்கு திட்டத்தைப் பற்றி என்ன தெரியப்போகிறது!"—என்கிற அலட்சியம் தான்! அதனால்தான் அவரும், அவர் சார்ந்திருக்கும் இயக்கமும் எதிர்க் கட்சிகளையும், தொழிலாளர்களையும் இழிவுபடுத்தி விட்டார்கள்!

பாவம்; அவருக்குத் தெரியாது போலிருக்கிறது—அரசியலிலே 'எருது'ம் ஏர் பிடிக்கும்! ஆமாம்; இன்றில்லா விட்டால் நாளை—நாளையில்லையேல் நாளை மறுநாள் எதிர்க் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகமும் ஆட்சிக்கு வந்து தான் தீரும்; வரத்தான் போகிறது!

—மித்திரனார் இதை உணர்ந்து கொள்வாராக!

ரஷ்யாவிலே அவலம்!

ரஷ்யாவிலே ஸ்டாலின் பதவிக்கு வந்தார். அவருக்குப் போட்டியாக இருந்த டிராட்ஸ்கியைத் துரோகி என்று குற்றம் சாட்டி ஒழித்துக் கட்டினார்.

ஸ்டாலினுக்குப் பிறகு மாலெங்கோவ் பதவிக்கு வந்தார். அப்போதும் போட்டி முளைத்தது அதன் விளைவாக நல்ல திறமைசாலி என்று முன்னால் பெயரெடுத்த பெரியா தூக்கிலேற்றப்பட்டார்.

பிறகு புல்கானின் பதவிக்கு வந்தார். ஆனால் இந்த முறை எவரும் தூக்கிலேற்றப்படவில்லையே; துரோகி என்று இழித்துரைக்கப்படவில்லையே என்று ஆச்சரியப்பட்டது உலகம்!

—அந்த ஆச்சரியப் படலத்தை நீக்கும் வகையிலே இப்போது ரஷ்யாவிலிருந்து புதுச் செய்தி யொன்று வந்திருக்கிறது.

முன்பு புல்கானினுக்குப் போட்டியாக இருந்த மாலெங்கோவும்; அவரது இதர சகாக்களான மாலட்டோவ்; காகானோவிச்; ஷெப்பிலாவ்—போன்றவர்கள் இப்போது முக்கிய பதவிகளிலிருந்து நீக்கப்பட்டு துரோகி என்கிற பட்டப் பெயருக்கும் உரியவர்களாகியிருக்கிறார்கள்!

நல்லவேளை; அந்த உயிர்கள் இன்னும் பறிக்கப்படவில்லையே என்கிற மகிழ்ச்சி ஒருபுறம் இருந்தாலும் ரஷ்யாவிலே ஏன் இந்த நிலைமை அடிக்கடி உருவாகிறது?

கம்யூனிச நாடுகள் தவிர்த்த இதர நாடுகளிலே இரு கட்சிகள் இருப்பது வரவேற்கப்படுகிறது.

ஆங்கிலப் பார்லிமெண்டரி ஜனநாயகம் இரு கட்சிகள் இல்லாமல் ஒரே ஒரு கட்சி மட்டும் இருந்தால் சரிவர இயங்க முடியாது.

அமெரிக்க ஜனநாயகமும் அப்படித்தான். ஆளும் கட்சியும்; ஆளும் கட்சிக்கு ஒரு எதிர்க் கட்சியும் வற்புறுத்தப்படுகின்றன.

ஆனால் கம்யூனிச நாடுகளோ, கம்யூனிஸ்ட் கட்சியோ இதை ஒப்புக்கொள்ளவில்லை.

எதிரிகளோ எதிர்க் கட்சிகளோ உயிரோடு இருக்கக் கூடாது என்பது அவர்கள் தத்துவம்!

—அதனால்தான் ரஷ்யாவிலே இந்த அவல நிலைமையும் காணப்படுகிறது!

—அதனால்தான் இந்தியாவில் கம்யூனிஸ்ட்டுகள் ஜனநாயக ஆட்சி இயலிலே ஈடுபடுவதும், கேரளத்திலே ஜனநாயகத்திற்கு உட்பட்ட அரசாங்கத்தை ஏற்றிருப்பதும் புவியாச்சரியங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது!

வெள்ளி *19—7—57* *சென்னை*

ஜூலை 15!

ஒரு இலட்சியம் விளக்கம் பெற்ற நாள்! ஒரு இயக்கம் உலகெங்கும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட தினம்!—ஜூலை 15!

அப்போதுதான் ஆதிக்கக் கடை விரித்திருந்த வடநாட்டவரின் அடிவயிற்றிலே எழுச்சி நெருப்பைக் கொட்டினோம்!

தடை பல இருந்திடினும் அஞ்சாத மடை திறந்த வெள்ளம் திராவிடர் விடுதலைத்தானை என்பதை ஆட்சிபீடத்திற்கு அறிவித்தோம்!

அன்றுதான் மூவேந்தர் வழிவந்தோர்; முக்கனி உண்டு முத்தமிழ் பேசி வாழ்ந்திடும் முதுகுலத்தோர் மூன்று முனையிலே படையை மோதினோம்!

அரசியல் துறையிலே சதிநோக்கோடு திராவிடச் சிறுவர்களைக் கடையர்களாக்கும் நோக்கம் கொண்ட குலதர்மக் கல்வித் திட்டத்தைக் குழிதோண்டிப் புதைத்தோம்!

பொருளாதாரத் துறையிலே தென்னகத்தைத் தேய்த்துக் கொழுத்து வாழும் வடநாட்டு ஆதிபத்தியவாதிகளை எதிர்த்து அடையாளப் போராட்டமாகக் கல்லக்குடிப் போராட்டம் நடத்தினோம்!

சமுதாயத் துறையிலே நம்மையெல்லாம் நாவிலே நரம்பின்றிப் பேசிய நாகரிகப் பதம் கெட்டவர்களுக்கும் நல்ல பாடம் தந்திட நானிலம் தெரிந்த ரயில் நிறுத்தப் போராட்டம் நடத்தினோம்!

தடியடிகள்; கண்ணீர்ப்புகைகள்; துப்பாக்கி ரவைகள்—வற்றாத ஜீவநதிகள்போல் தொடர்ந்துவந்து தாவின நம்மீது!

—இருந்தும் அவைகளுக்கெல்லாம் கலங்கவில்லை, கடமையையும் கண்ணியத்தையும் துணையாகப் பெற்ற இயக்கம்!

ஜூலை 15- நடந்து முடிந்து நான்கு ஆண்டுகள் ஓடிவிட்டன; இருந்தும் அன்று அதிகார பீடம் அவிழ்த்துவிட்ட அடக்குமுறைக் கணைகளை நம்மால் மறந்திட முடியவில்லை.

ஆறு வீரர்கள்—தாயகத்தின் விடுதலை விருத்தம் பாடத் தொடங்கிய அந்த வேளையிலே தங்கள் உயிரையே பணயம் வைத்திருக்கிறார்கள்! பலர் காயங்களைத் தாங்கி இன்னமும் அதிகார பீடத்தின் ஆணவத்தை உணர்த்தும் நடமாடும் நினைவுச் சின்னங்களாய் உலாவுகிறார்கள்! ஆயிரக் கணக்கானவர்கள் அன்று வெஞ்சிறை புகுந்து தியாக வாழ்வுபெற்று வாழ்கிறார்கள்!

—சென்ற காலத்தைப்பற்றிய நினைவுகள் தூண்டுகோலாகவும்; நிகழ்காலம் பயனுள்ளதாகவும்; வருங்காலம் நம்பிக்கையுள்ளதாகவும் இருக்கின்ற இந்த நேரத்தில் அந்தப் பொன்னான நாளில் உயிர் துறந்த உத்தமர்களுக்காக நமது கண்ணீரைக் காணிக்கையாக்கிவிட்டு இலட்சியப் பாதையில் மேலும் வேகமாய் நடப்பதற்கு அவர்கள் உதாரணத்தைப் பின்பற்றுவோமாக!

★

கடைசி ஆயுதம்!

அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்—என்று பழமொழி கூறுவார்கள்!

அரசியலிலும் அப்படித்தான்; அற்ப மனப்பான்மை கொண்டவர்கள் கைக்கு அதிகாரம் சென்றால் அவர்கள் நிலைக் கண்ணாடியில் தெரியும் தங்கள் உருவத்தைத் தவிர வேறு எதையும் மதிக்காதவர்களாய், சர்வாதிகாரச் செருக்கு தொனிக்கின்ற வகையிலே கூத்தாடத் துவங்கி விடுகிறார்கள்!

—இதற்குத் தக்க உதாரணம் தருவதாய் இருக்கிறது; தபால் தந்தி ஊழியர்களைப் பொறுத்தவரையிலே தனது கொள்கையை வகுத்துக் கொண்டிருக்கும் மத்திய அரசாங்கம்!

வேலை நிறுத்தம் என்பது தொழிலாளி வர்க்கம் தனது போராட்டத்தில் வெற்றி பெறுவதற்காக உபயோகிக்கின்ற கடைசி ஆயுதம்.

சாம, பேத, தான, தண்டம்—என்கிறார்களே; இதில் மூன்றையும் முதலில் உபயோகித்துப் பார்த்துவிட்டு; அப்போதும் பலனேதும் கிடைக்காவிட்டால் 'தண்டமாகிய' வேலை நிறுத்தக் கருவியை உபயோகித்தால் தான் அந்தக் கருவிக்கு ஒரு முக்கிய மதிப்பும் ஏற்படும்; தொழிலாளர் தலைவர்கள் நல்ல போர்முறையிலே கைதேர்ந்தவர்கள் என்ற சிறப்பும் கிடைக்கும்!

ஆனால் இந்திய உபகண்டத்தைப் பொறுத்தவரையிலே தொழிலாளி வர்க்கத்திடையே இந்த நிலைமைகள் இருப்பதாகத் தெரியவில்லை.

எங்கு நோக்கினும் வேலை நிறுத்தம் என்னும் படைக்கலனை 'துருப்புச் சீட்டா'கப் பயன்படுத்தப் படுகிற அளவுக்குச் சர்வ சாதாரணமாகி விட்டதைத்தான் காண்கிறோம்!

என் இந்த நிலைமை?

தொழிலாளர் தலைவர்கள்—பாட்டாளி வர்க்கத்தின் படையை நடத்திச் செல்பவர்கள்—பொறுப்பற்றவர்களாக; நல்ல பாதை விட்டுத் தீய பாதை செல்பவர்களாக மாறிவிட்டார்களா?

—இல்லை, இல்லை!

அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் வேலை நிறுத்தம் என்னும் அஸ்திரத்தின் பெருமையையும்; அதை எப்போது உபயோக்க வேண்டுமென்ற தருணத்தையும்!

—இருந்தாலும் அதிகாரபீடமிருக்கிறதே; அது பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டு; 'வேறு எந்த வகையிலும் நாங்கள் வளைந்துகொடுக்க மாட்டோம்; சாம, பேத, தானங்கள் எங்களுக்குத் தூசுகள்; தண்டம் கொண்டு வந்தால்தான் நீங்கள் எங்களது கவனத்தைச் சற்றுவது திருப்ப முடியும்'—என்கிற விதத்திலே நிலைமை வளர்ந்திருக்கிறது.

உதாரணமாக தபால் தந்தி தொழிலாளர்கள் இப்போது வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் இந்தக் கோரிக்கைகளை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவித்து நீதி கோரியிருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

—இந்தக் கோரிக்கைகள் முப்பது அம்சம் கொண்டவை; இவைகளை அமுலாக்க வேண்டுமென்று அவர்கள் மாநாடுகள், கூட்டங்கள் நடத்தித் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்!

'கோரிக்கை வாரம்' கொண்டாடித் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார்கள்!

கருப்புச் சின்னங்களை அணிந்துகொண்டுத் தங்கள் கண்டனத்தைக் காட்டியிருக்கிறார்கள்!

—நாகரிகமான இந்தப் போர் முறைகள் அனைத்திற்குப் அசைந்து கொடுக்கவில்லை, இந்த அரசாங்கம்!

கேளாக் காதினராய் இருந்தார்கள் அதிகார வர்க்கத்தார் குமுறும் எரிமலையாகிவிட்டது தொழிலாளர் கூட்டம்!

—அதன் விளைவுதான் இதுவரை வாய்மூடி மௌனியாக இருந்த அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரியார் தபால்—தந்தி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் என்னும் தங்களது பலமான கடைசி ஆயுதத்தை வீசியதும்; நீடு துயில் நீங்கப்பெற்று; விழித்துக் கொண்டு செயலாற்ற முனைந்திருக்கிறார்!

தொழிலாளர் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுகிறார்; பிதற்றுகிறார்; கெஞ்சுகிறார்; கூத்தாடுகிறார்!

இரண்டு ஆண்டுகள் அலட்சியக் குட்டையிலே ஊறிக்கொண்டிருந்தது தபால் போக்குவரத்து இலாக்கா! இன்றுதான் அதன் எருமை மனப்பான்மை நீங்கியிருக்கிறது!

—ஏன் இந்த அலட்சிய 'மனப்பான்மை? தும்பை விட்டு வால் பிடிக்கும் இந்தத் தாமதப் போக்கிற்கு என்ன காரணம்?

வேறு ஒன்றுமில்லை; ஏகாதிபத்திய நோக்கம் கொண்ட வெள்ளையன்தான் வெளியேறியிருக்கிறானே தவிர; அவனது ஆட்சிமுறை அப்படியேதான் இருக்கிறது!

அதனால்தான்; நேரடி நடவடிக்கை என்னும் நெருப்பைக் கொட்டினால்தால் விழிப்பேற்படும் என்கிற அளவுக்கு அதிகார பீடம் ஆனந்த நித்திரை செய்து கொண்டிருக்கிறது!

★ ★ கற்பனை உரையாடல் ★ ★

அன்றும் இன்றும்!

வரலாற்று ஆசிரியர்: மாணவர்களே! இன்று முகம்மது துக்ளக் என்பவரின் ஆட்சியைப் பற்றிப் படிப்போம்! அவரைப் பைத்தியக்கார துக்ளக் என்று அழைப்பார்கள்!

ஒரு மாணவன்: பைத்தியக்கார துக்ளக்கா? பைத்தியம்கூட அரசாண்டதா சார்?

ஆசிரியர்: ஆம்! அவர் பைத்தியக்காரத் தனமான காரியங்களைச் செய்ததால் அவருக்கு அப்பெயர் வந்தது. அவர் நாட்டின் ஒரு கோடியிலிருந்த டெல்லியிலிருந்து, நாட்டின் நடுவில் அமைந்துள்ள தேவகிரிக்குத் தலைநகரை மாற்றச் செய்தி ஏற்பாடுதான் அவருக்கு அந்தப் பெயரை வாங்கித் தந்தது.

மாணவன்: சார், "ஓர் நாட்டின் தலைநகர் அந்த நாட்டின் நடுவிலிருப்பதே நல்லது" என வன்பு நீங்கள் தானே கூறினீர்கள்! இந்த நல்ல செயலைச் செய்ததற்கா துக்ளக்குக்கு அந்தப் பெயர் சூட்டப்பட்டது?

ஆசிரியர்: நீ சொல்வதும் சரியே! ஒரு நாட்டின் அலுவலகங்கள் பொது மன்றங்கள் யாவும் அந்த நாட்டின் நடுப்பாகத்திலிருப்பதே நல்லது. உதாரணமாகச் சண்டைக்குச் செல்லும்போது போர் வீரர் குழுவின் தலைவன் எல்லோருக்கும் நடுவிலோ அல்லது அருகிலேயோ இருப்பான். அப்போதுதான எல்லாப் போர் வீரர்களையும் கட்டாயப் படுத்தி வேண்டிய உத்தரவுகளை உடனுக்குடன் எல்லோருக்கும் தெரியப் படுத்த முடியும். அதேபோல நாட்டின் சர்க்கார் அலுவலகங்களும், மன்றங்களும, நாட்டின் நடுப்பாகத்தில் அமைந்திருந்தால்தான் நாட்டு மக்களின் குற்றங் குறைகளை உடனுக்குடன் அறிந்து, அதை நீக்க முடியும் மேலும் மக்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட முடியும். அதனால்தான் துக்ளக் தலைநகரைத் தேவகிரிக்கு மாற்றினார் ஆனால் அவர் டெல்லியில் வாழ்ந்து வந்த மக்களனைவரையும் தேவகிரியில் குடியேறும்படிக் கட்டளையிட்டார். கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தேவகிரிக்குப் புறப்பட்டுச் சென்ற பலர் வழியிலே மாண்டனர். உயிரோடு தேவகிரியை அடைந்த மக்களும் பிறந்த ஊரின் ஏக்கத்தால் வருந்தியதால், துக்ளக், மீண்டும் தலைநகரை டெல்லிக்கு மாற்றினான். இது பைத்தியக்காரத் தனமல்லவா?

மாணவன்: சார்! ஒரு சந்தேகம்! இப்பொழுது நம் சென்னை நகரின் நடுவிலிருந்த அசெம்பிளியைப் பல இலட்சம் செலவு செய்து, நகரின் ஒரு மூலையிலே உள்ள கோட்டைக்கு மாற்றுவானேன்? துக்ளக், நாட்டின் நடுவிலிருந்தால் மக்களுக்கு நல்லது என்ற நல்லெண்ணத்தில் மாற்றினான். ஆனால் காமராசர் மக்களைவிட்டு ஒதுங்கி ஒதுங்கி ஓடநினைப்பானேன்? எனவே காமராசரையும் இந்தப் பெயரிட்டு...

ஆசிரியர்: சட்! அதிகப் பிரசங்கி! அசெம்பிளியை ஏன் அவ்வளவு செலவு செய்து மாற்றினார்களென்றால், கேரளா பிரிந்ததால் எம். எல். ஏ. க்களின் எண்ணிக்கைக் குறைந்து விட்டது! மேலும் அசெம்பிளிக்குக் கோட்டையிலிருக்கும் மந்திரிகள் சிரமப்பட்டு வர வேண்டியிருந்தது. குறைந்த மெம்பர்களுக்கு அவ்வளவு பெரியக் கட்டிடம் தேவையில்லையென்ற காரணத்தினால்தான் மாற்றினார்கள்!

மாணவன்: சார்! இப்பொழுது மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. மேலும் நியாயமாக தமிழ் நாட்டிலே உள்ள சுமார் மூன்று கோடிக்கு மேலான மக்களுக்குக் குறைந்தது மூன்னூறு எம். எல். ஏ. க்களாவது தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இனி அடுத்தத் தேர்தலிலே மூன்னூறு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் அப்பொழுது என்ன செய்வது?

ஆசிரியர்: அப்பொழுது வேண்டுமானால் அசெம்பிளியைப் பழையபடியே மவுண்ட்ரோட்டிற்கு மாற்றி விட்டால் போச்சு!

மாணவன்: சார்! லட்சக்கணக்கான ரூபாய் செலவில் மவுண்ட்ரோடில் அசெம்பிளி கட்டிடம் கட்டப்பட்டது. இப்பொழுது பல இலட்சம் செலவில் அது கோட்டைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. மெம்பர்கள் தொகை அடுத்த தேர்தலில் அதிகரிக்கும்பொழுது மீண்டும் பல இலட்சம் செலவில் பழைய கட்டிடத்திற்கு மாற்ற வேண்டும்! மக்களின் வரிப் பணம் எப்படிப் பாழாக்கப்படுகிறது பார்த்தீர்களா சார்?

மற்றொரு மாணவன்: அது மட்டுமல்ல! மேலும் மவுண்ட்ரோடில் உள்ள பழைய கட்டிடத்தை டெல்லி சர்க்காருக்குக் கொடுக்கப்போகிறார்களாம்! எனவே இன்னும் ஐந்தாண்டுக்குப் பிறகு மீண்டும் தக்க இடம் தேடி, வாங்கி பின் பல லட்சம் ரூபாய்கள் செலவு செய்து புதுக் கட்டிடம் கட்ட வேண்டும்! இது பைத்தியக்காரத்தனத்திலும் பைத்தியக்காரத்தனமாக எனக்குத் தோன்றுகிறது சார்! முகம்மது துக்ளக்கை 'வீசம்' பைத்தியமென்றால் இந்தச் சர்க்காரை 'முழுப் பைத்தியம்' என்றுதான் மகுடம் சூட்டி அழைக்க வேண்டும்!

ஆசிரியர்: டேய்! என்னடா இது! நாக்கை அடக்கு! இது சர்க்கார் பள்ளிக்கூடமென்பதைச் சிந்தித்துப் பேசு தம்பி! அதிகப் பிரசங்கித்தனமா தத்துப் பித்துன்னு இங்கே உளறினால் உன்னைப் பள்ளியை விட்டே வெளியேற்றி விடுவேன்! வாயை மூடிக் கொண்டு 'கப்சிப்' பெனக் கீழே உட்கார்!

(மாணவன் பேசாமல் அமர்ந்து கொள்கிறான்.)

—ஆரூரானந்தன்

காலம் சென்ற நாயன வேந்தர் திருவாவடுதுறை டி. என். ராசரத்தினம் 'அவர்களின் பெயரால் படிப்பகம் ஒன்றை திருவாரூரிலுள்ள ஆர்வம் மிக்க தோழர்கள் நிறுவி இருக்கின்றனர். அப் படிப்பகத்தை அறிஞர் அண்ணா அவர்கள் சென்ற 7—7—57 அன்று திறந்து வைத்தார்கள்.

படத்தில் ஆசிரியர் மு. க., அறிஞர் அண்ணா, துவக்க விழாத் தலைவர் திருவீழிமிழலை எஸ். சுப்பிரமணியம்—ஆகியோரைக் காணலாம்.

—புகைப்படம்: சௌந்தர், மாயவரம்.



படிப்பகத்தில் நாதசுர மன்னரின் உருவப் படத்தை ஆசிரியர் மு. க. திறந்து வைக்கிறார்.

—புகைப்படம்: கிருஷ்ணா ஸ்டுடியோ, திருவாரூர்.

மியூசியம் தியேட்டரில்
28—7—57 ஞாயிறு மாலை,
6-மணிக்கு
கவிஞர் கண்ணதாசன்
அவர்கள் தலைமையில்
நண்பர்கள் கலைமன்றத்தார்
நடத்தும்
வே. கபிலன்
எழுதிய
"சாகாவரம்"
நாடகம் நடைபெறும்.

நுழைவுக் கட்டணம்:
ரூ. 3, 2, 1 அணா 8.

ஆடத் தெரியாதவனுக்கு முற்றம் கோணல்!

[11—7—57 அன்று சென்னை சட்டமன்றத்தில் தோழர் மு. கருணாநிதி அவர்கள், நீர்ப்பாசன மானிய வெட்டுப் பிரரேபனைமீது ஆற்றிய விளக்க உரையின் முழு விவரம் இங்கு தரப்படுகிறது]

"குறிப்பிடப்பட்ட வெட்டுப்பிரேரணை நீர்ப்பாசன வசதியைப் பற்றியது. சென்னை மாநிலத்தில் இன்னும் எந்த வகையில் நீர்ப்பாசனம் தேவைப்படுகிறது என்பதைப் பற்றிய குறிப்புகளை இங்கே தருவதற்கு ஆசைப்படுகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் நீர்ப்பாசன வசதிகளால் பயன்பெறும் நிலப் பரப்பு இன்னும் எவ்வளவு அதிகமாகும் என்ற புள்ளி விவரங்களை நாம் ஒரு முறை காண்பது மிக மிக நலம் என்று கருதுகிறேன்.

வட நாட்டிலே இருக்கின்ற மாகாணங்களில் நீர்ப் பாசனத் திட்டங்களால் பயன் பெறுகின்ற நிலத்தினுடைய பரப்பு மேலும் எவ்வளவு அதிகரிக்கிறது என்பதையும், நம்முடைய சென்னை மாநிலத்தில் இத் திட்டங்களால் மேலும் பயன்பெறக் கூடிய பரப்பையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில நீர்ப்பாசனத் திட்டங்களால் பஞ்சாப் மாகாணத்தில் 17 இலட்சம் ஏக்கரா நிலப் பரப்பு மேலும் அதிகமாகப் பயன்பெறப் போகிறது. ஒரிசா மாகாணத்தில் 1i இலட்சம் ஏக்கரா நிலப் பரப்பு மேலும் அதிகமாகப் பயன் பெறப் போகிறது.

மாகாணம்	ஏக்கர்
உத்தரப் பிரதேசத்தில்	13 10 000
மேற்கு வங்கத்தில்	12.70.000
இராஜஸ்தானில்	11 60.000
பீகார்ல்	11,40 000
பம்பாயில்	10,00,000
மத்திய பிரதேசத்தில்	4.00,000
ஆந்திராவில்	2,90,000

பரிதாபத்திற்குரிய நம் சென்னை மாநிலத்தில் 1,40 000 ஏக்கராதான் அதிகப்படியாக இந்த நீர்ப்பாசன வசதிகளால் பயன்படப் போகிறது என்பது இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட புள்ளி விவரங்களிலிருந்து நமக்குத் தெரிய வருகிறது.

புள்ளி விவரத்தை யொட்டிப் பேசவேண்டும் என்று கூறப்பட்ட காரணத்தால், வெறும் 'வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது.' என்பதை மட்டும் சொல்லாமல், புள்ளி விவரங்களையும் குறிப்புகளையும் நான் அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்திய சர்க்கார், சென்னை மாநிலத்தில் ஆற்று நீர் மேட்டுப் பகுதிகளிலும் பயன்படவேண்டும் என்பதற்காக 'ஆற்று நீர் இரைப்புத் திட்டம்' என்ற ஒரு திட்டம் 1951-52-ம் ஆண்டில் அமுலாக்கப்பட்டு, அதற்காக மத்திய சர்க்கார் 50 சதவிகிதம் மானியம் தருவதாக ஒப்புக்கொண்டார்கள். அப்படி தரப்பட்ட மானியத்தை 1953-ம் ஆண்டு நிறுத்திவிட்டக் காரணத்தால், அந்த ஆற்று நீர் இரைப்புத் திட்டத்தை சென்னை மாநில சர்க்கார் நிறைவேற்ற முடியாமல், சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டு இறுதியில் பரிபூரணமாக நிறுத்தப்பட்டு விட்டது என்பதை மறக்க முடியாது. அந்த ஆற்று நீர் இரைப்புத் திட்டம் இல்லாததால், 'பம்ப் செட்டு'கள் பொருத்தி, மேட்டுப் பகுதியில் வளப்படுத்தப்படும் வசதி ஏற்படாமல் போகின்றது என்பதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

சென்னை மாநிலத்தில் நீர்ப்பாசனத் திட்டங்கள் அதிகமாக இல்லை என்பதற்குச் சொல்லப்படும் காரணங்களில் மிகமிக முக்கியமான காரணம், 'இங்கு பெரிய ஆறுகள் கிடையாது' என்பதுதான். 'ஒரு சில ஆறுகளுடைய தண்ணீரை கடலில் கலக்காமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்' என்று அமைச்சர் பெருமக்கள் எடுத்துச் சொன்னார்கள். கடலில் விழுகின்ற காரணத்தால் மட்டும ஆற்று நீர் வீணாகி விடவில்லை; வேறு சில காரணங்களாலும் வீணாகப் போகின்றது என்று சட்டநாத கரையாளர் எடுத்துக் கூறினார்கள். அது மாத்திரமல்ல; கடலில் கலக்கின்ற தண்ணீர் தடுக்கப்பட்டால் மாத்திரம் போதாது! ஆற்று நீர் கழனிகளில் பயன்படாத நிலையில் மணலிலேயே சோர்ந்து வீணாகப் போகின்றது என்பதை மறந்து விடக் கூடாது.

என்னுடைய குளித்தலைத் தொகுதியைப் பற்றி கவர்னர் பெருமானின் உரையின்மீது எழுந்த விவாதத்தில் நான் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். 'குளித்தலைத் தொகுதி மிக மிக வளமான தொகுதி' என்று குளித்தலைத் தொகுதியில் தலைநகரில் இறங்கும் ஒருவர் சொல்லலாம். உண்மையில் குளித்தலைத் தொகுதியை—குளித்தலை, மாயனூர், வெள்ளியணை—என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒருவர் வரிசையாகப் பயணம் நடத்தினால், 'குளித்தலைத் தொகுதி வளமான' தொகுதி—எழிலான தொகுதி என்று எண்ண ஆரம்பித்து, அடிக் கரும்பை சுவைப்பது போல் சுவைத்து, மாயனூர் சென்றால் நடுக் கரும்புக்கு வந்து, பிறகு வெள்ளியணைக்கு வரும்போது நுனிக் கரும்பை சுவைப்பதுபோல் முடியும்!

வெள்ளியணையில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல், வரண்ட நிலங்களாக உள்ள பல இடங்களை அங்கே காண முடியும். குடகனாறு திட்டம் அங்கே தேவை; அத்தகைய குடகனாறு திட்டம் நிறைவேற்றப்படுமானால் 10.000 ஏக்கரா புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்ற முடியும் என்று 1951-ம் ஆண்டிலிருந்து பெரிய கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. இந்தக் கிளர்ச்சியை ஏதோ பலாத்காரப் போராட்டம் என்று நான் குறிப்பிடுகிறேன் என்று யாரும் கருதக் கூடாது. அங்கேயிருக்கும் பொது மக்கள்—அதாவது எந்த அரசியல் கட்சியிலும் சார்பற்ற பொது மக்கள்—அந்தக் குடகனாறு திட்டம் தேவை என்று கூறி, 19—2—1951-ல் மராமத்து மந்திரியிடமும் 2-9-52ல் நிதி அமைச்சரிடமும் 11-1-55ல் முதல் அமைச்சரிடமும் அதற்கான மனுக்களைத் தந்து, குடகனாறு திட்டத்தைக் கவனிக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டது.

பழனி மலையிலிருந்து உற்பத்தியாகிற குடகனாறு—ஏறத்தாழ 86 மைல் நீளமுள்ள ஆறு—சுமார் 30 மைல் நீளம் திண்டுக்கல் தாலுகாவில் ஓடி, 1000 ஏக்கரா நிலத்திற்கு மட்டும் பயன்படுத்தப்பட்டு, அங்கிருந்து மிச்சமுள்ள 56 மைல் நீளம் அதன் தண்ணீர் எல்லாம் வீணாகப்போய் அமராவதியில் கலக்கிறது என்ற நிலைமையில், வேடசெந்தூருக்கு அருகிலுள்ள கல்லார்பட்டி என்ற இடத்தில் ஒரு நீர்த்தேக்கம் அமைத்து, அந்தத் தண்ணீர் அங்கே பயன்படுத்தப்பட சுமார் 23 மைல் நீளமான ஒரு வாய்க்கால் வெட்டப்பட்டால், வெள்ளியணை, வீரவல்லி, ஜெகதாபி, உப்பிடமங்கலம் என்ற பல ஏரிகள் நிரம்பி, 10 ஆயிரம் ஏக்கரா நிலம் அங்கே சாகுபடி ஆகுமென்றும் அதற்கு 12 இலட்சம் ரூபாய் செலவாகுமென்றும், கரூர் பொது மராமத்து இலாகா சூபர்வைசர் அதற்கு ஒரு திட்டமே தயாரித்துக் கொடுத்தார். அப்படித் தயாரிக்கப்பட்ட அந்தத் திட்டத்தைப் பெற்ற மக்கள் திருச்சி 'எக்சிக்யூடிவ் எஞ்ஜினியர்' அலுவலகத்திற்கு 22—10—1953-ல் மனு மூலம் தெரிவித்தும், இதுவரை கேட்பாரற்று அந்த மனு அங்கே தூங்கிக் கொண்டிருக்கிறது.

12 இலட்சம் ரூபாய் செலவு செய்தால், 10 ஆயிரம் ஏக்கரா நிலம் அங்கே பயன்படும்—புஞ்சை நஞ்சையாக மாறும் என்று சொல்லப்படுகிறது. இந்த நேரத்தில், மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுக்கு சபாநாயகரின் அனுமதியின்பேரில் ஒன்று தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

ஆரணியாறுத் திட்டத்திற்கு ரூ 104.19 இலட்சம் செலவானாலும் பயன்படுகிற நிலங்கள் 5-ஆயிரம் முதல் 7-ஆயிரம் ஏக்கராதான். இதனால் ஆரணியாறுத் திட்டம் தேவை இல்லை என்று நான் கூறவில்லை. 5000 முதல் 7.000 ஏக்கரா நிலங்களுக்குப் பயன்படுகிற ஆரணியாறு திட்டத்திற்கு 104.19 இலட்சம் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டத்திற்கு ரூ 18 403 இலட்சம் செலவாகும் என்றும், அதனால் பயன் பெறுவது 7,500 ஏக்கரா நிலம் என்றும் சொல்லப்படுகிறது. இப்படி ரூ. 184 இலட்சமும், ரூ. 104 இலட்சமும் செலவிட்டு 7 ஆயிரம், 5 ஆயிரம் ஏக்கரா

8-ம் பக்கம் பார்க்க

ஜூலை இதழ் விற்பனையாகிறது!

சிந்தையைத் தொடும்
சிறுகதை சொல்வதில்;
செந்தமிழ் மணக்கும்
கட்டுரை தருவதில்;
செந்தேன் நிகர்க்கும்
நறுங்கவிதை பொழிவதில்;
எட்டுதிக்கும் சென்று எழில்
எண்ணம் சேர்ப்பதில்;
தன்னிகரில்லா தனிப்பெரும் ஏடு!

முத்தாரம்

யாழ்- மு. க. வின்
கவிதைநடைச் சிறுகதை!

★ இசைபட வாழ்வோம்! ★

அறிஞர் அண்ணா

சென்ற 7-7-57 அன்று திருவாரூரை அடுத்த காட்டூர் என்ற சிற்றூர் விழாக்கோலம் கொண்டு காட்சியளித்தது. அவ்வூர் ஊராண்மைக் கழக ஆரம்பப் பள்ளியின் புதிய கட்டிடத் திறப்புவிழா அன்று நடைபெற்றது.

ஊராண்மைக் கழகத் தீர்மானத்தின்படி தோழர் மு. கருணாநிதி அவர்களைத் தலைவராகவும், ஊராண்மைக் கழகத் தலைவரான கே. வி. இராமையாவைச் செயலாளராகவும் கொண்ட கட்டிட நிதிக்குழு ஒன்று முன்பு அமைக்கப்பட்டிருந்தது. குழுவினர் முயற்சியால், கட்டிடம் விரைவிலே கட்டி முடிக்கப்பட்டு, அன்றைய தினம் திரு. ஆரோக்கியசாமி அவர்களின் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது.

அறிவாலயத்தை அறிஞர் அண்ணா அவர்கள் திறந்து வைத்தார்கள். அவர்களது சிறப்பு விழா சொற்பொழிவின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது:

அன்புள்ள தலைவரவர்களே! நண்பர்களே!

இந்தச் சிற்றூரில் மிக எளிதான ஓர் அறிவாலயத்தைத் திறந்த வைக்கின்ற இந்தத் திருநாளை நான் முன்னின்று நடத்தித் தர வேண்டுமென்று அன்போடு அழைத்தமைக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைக் கூறிக் கொள்கிறேன்! இந்தச் சிற்றூரிலே நடைபெறுகின்ற இந்த மகிழ்ச்சிகரமான விழாவில் நீங்கள் பெருந் திரளாகக் கூடியிருப்பதும், இந்த வட்டாரத்தில் நல்ல மதிப்பும், சிறந்த செல்வாக்கும், பணமும் படைத்த என்னுடைய மதிப்பிற்குரிய பல பெரியவர்கள் இந்த விழாவில் கலந்து கொள்வதும், உண்மையிலேயே பெருமைக்குரிய நிகழ்ச்சியாகும்.

சாதாரணமாக இத்தகைய பள்ளிகள் திறப்புவிழாக்களில், பத்து ஆண்டு காலத்திற்கு முன்பு மக்கள் காட்டி வந்த ஆர்வத்தைவிட இப்போதெல்லாம் மிக்க ஆர்வத்தைக்காட்டுவது உண்மையிலேயே நல்ல அறிகுறியாகும்.

இந்த சீரும் சிறப்பும் பெற்ற விழாவுக்கு என்னுடைய நீண்ட காலத்து நண்பர் ஆரோக்கியசாமி அவர்கள் தலைமை வகித்தது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அவர் இந்த விழாவுக்குத் தலைமை வகிப்பதும், இங்கே ஒரு பள்ளி கட்டி முடிக்கப்பட்டுத் திறக்கப்படுவதும் ஒன்றுக்கொன்று நிரம்பப் பொருத்த முடையது. ஏனெனில், 'எடுத்தகாரியத்தை முடித்தே தீருவேன்' என்ற உறுதியின் உருவம் நண்பர் ஆரோக்கியசாமி அவர்கள். அதைப்போல் இந்தப் பள்ளிக் கட்டிடமும் நினைத்த காரியத்தை நடத்தியே காட்ட வேண்டும் என்று நண்பர் இராமையா அவர்களின் நெஞ்சில் எழும்பிய எண்ணத்துடன், தம்பி கருணாநிதியின் வண்ணமும் சேர்ந்து மிக நல்ல காரியமாக இங்கு எழும்பியிருக்கிறது. என்னுடைய தம்பி ஈடுபட்டு வெற்றிகரமாக நடத்தியிருக்கின்ற இந்தக் காரியத்தை வரவேற்கின்றேன். வரவேற்பதுமாத்திரமல்ல; இத்தகைய நல்ல பல செயல்களை தமிழகம் அவரிடமிருந்து எதிர்பார்க்கிறது.

தமிழகத்திற்கு இன்றைய தினம் பெரிய பெரிய செல்வவான்களும், சீமான்களும் ஒரு காலத்தில் அளித்து வந்த வள்ளல் தன்மையும் நன்கொடைகளும் நாட்டு மக்களுக்குப் போதுமானதாக இல்லை. அதற்குக் காரணங்கள் மூன்றுஎன்று நான் கருதுகின்றேன். வர வர அவர்கள் தங்களுடைய சொத்துக்களை இழக்கவேண்டிய மக்களாட்சி வேகமாக வளர்ந்து கொண்டு வருகிறது என்பது முதல் காரணம். ஏராளமானவைகளை ஏற்கனவே செய்துவிட்டோமே; இனியும் நாம்தானா செய்யவேண்டும் —என்ற சலிப்புணர்ச்சி இரண்டாவது காரணம். ஏழை மக்களும் இனி அதிகமாக அவர்களிடம் எதிர் பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது—இது மூன்றாவது காரணம்!

இந்த மூன்று காரணங்களினால், இனி இம்மாதிரி அமைப்புகள் ஏற்பட இருக்கின்ற இடங்களில் எல்லாம், மக்கள் சார்பாக பணியாற்றுகிறவர்கள் கட்சி வேற்றுமை பாராட்டாது, அவர்களாகவே ஈடுபட்டு இத்தகைய அறிவாலயங்கள் ஏராளமாக நிறுவ வேண்டும்.

ஏனென்றால், யார் எப்படித்தான் இந்த நாட்டைப்பற்றி பெருமையாகப் பேசிக் கொண்டாலும் — இதைப் புண்ணிய பூமி, பாரத் வர்ஷம், பகவான் பத்து முறை அவதாரம் எடுத்தத் திருத்தலம் என்று எவ்வளவுதான் பாராட்டினாலும்—இந்த நாட்டில் எங்கே திரும்பினாலும் வானத்தை முட்டுகின்ற கோபுரங்களும், வண்ணைக் களஞ்சியம் போல் விளங்குகின்ற சாலைகளும், சோலைகளும், திருக்குளங்களும் நிறைந்த நாடு என்று எவ்வளவுதான் புலவர் பெருமக்கள் நமக்குக் காட்சியாக்கிக் காட்டினாலும்—ஒன்றை நாட்டு மக்கள் மறந்து விடக்கூடாது: உலகிலேயே படிப்பு குறைவாயுள்ள நாடு நம்முடைய நாடு என்பதை நாம் கிஞ்சித்தும் மறந்துவிடக்கூடாது!

சர்க்காரின் கணக்குப்படி, இன்றைய தினம் நூற்றுக்கு பதினெட்டு அல்லது பத்தொன்பது பேர்தான் கல்வியறிவு பெற்றிருக்கின்றனர் என்ற நிலையில் நம் நாட்டில் கல்வி அறிவு பரவி இருக்கிறது.

நாம் எவ்வளவுதான் பூர்வீகப் பெருமைக்கு உரியவர்கள் ஆனாலும்—வேதம் ஒன்றுக்கு நாலாக இருந்தாலும்—ஆய கலைகள் அறுபத்து நான்கு இருப்பதாக கவனப்படுத்தப்பட்டாலும்-தேவாரத் திருவாசகங்கள் செந்தமிழிலே ஓதப்பட்டாலும்-எழுத்து வாசனையற்ற மக்கள் நூற்றுக்கு எண்பது பேருக்குமேல் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். உலகில் கல்வியின் தரத்தில் முன்னேறியிருக்கின்ற நாடுகளுக்கு மத்தியிலே நம் நாட்டின் இந்த நிலை நமக்கும் பெருமையல்ல; உலகத்திலே நம்மத நல்ல மதிப்பையும் வாங்கித் தராது.

ஆகவேதான் கல்வியறிவு மிக வேகமாக இந்தத் தலைமுறையிலே வளர வேண்டும். இதை நன்றாக உணர்ந்திருக்கின்ற காரணத்தால்தான் சர்க்காரை இன்றையதினம் நடத்துகின்ற காங்கிரஸ் கட்சிகூட அவர்கள் இயற்றி இருக்கின்ற சட்ட திட்டங்களில், வெகு விரைவில் இந்த நாட்டில் கல்வியறிவில்லாதவர்கள் இல்லை என்று சொல்லத்தக்க வகையில் கட்டாய இலவச ஆரம்பக் கல்வியை வேகமாக வளர்க்க வேண்டுமென்று ஏட்டிலே எழுதி வைத்திருக்கிறார்கள். அது நாட்டிலே நல்ல முறையிலே நடைபெற வேண்டுமென்றால் நம்மைப் போன்றவர்கள் அதற்கு நல்ல முறையிலே கை கொடுத்து, ஒத்துழைத்து, காரியத்தை நடத்திக் காட்டினால்தான் இங்கிருக்கின்ற தற்குறித்தனம் நம் தலைமுறையிலே நீங்கும். நூற்றுக்கு 18 அல்லது 20 பேர்தான் படித்திருக்கிறார்கள் என்றாலும், அவைகளில் யார் யார் சேர்கிறார்கள் என்பதையும் கவனப்படுத்திப் பார்க்க வேண்டும். மூன்றாவது வகுப்பு வரை—நான்காவது வகுப்பு வரை—ஆறாவது வகுப்பு வரை படித்து விட்டு அதற்கு மேல் போக முடியாமல், தங்கள் சொந்த அலுவல்களில் ஈடுபட்டுவிட்டு, அதன் காரணத்தால் படித்ததை மறந்து விடுகிறார்களே, அவர்களையும் கணக்கு சேர்த்துத்தான் நூற்றுக்கு 18—பேர் எழுதுவது சரியாக இருக்க வேண்டும் என்று

அறிஞர் அண்ணா திறந்து வைத்த அறிவாலயம்!

கூட அர்த்தமல்ல; படிப்பது சரியாக இருக்க வேண்டும் என்று கூட அர்த்தமல்ல; எழுதப் படிக்கத் தெரிந்தாலே போதும் என்ற தாராளக் கணக்கை வைத்துத்தான் நூற்றுக்கு '18 பேர் படித்திருக்கிறோம்-என்று கணக்கு காட்டுகிறது.

எங்கள் பகுதியில் ஒரு கிராமத்தில் இந்த வகையில் படித்த ஒருவர் இருந்தார். அவரது வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் ஒரு தவலை திடீரென்று காணமல் போய் விட்டது. அதை உணர்ந்த அவர் உடனே போலீசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கருதினார். ஆனால் அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாத காரணத்தினால், அந்த ஊரிலேயே பெரிய படிப்பாளி யார் என்று தேடி, கண்டு பிடித்து, அவரிடத்திலே சம்பவத்தைச் சொல்லி, அவர் தகவலை எழுதி போலீஸ் இலாக்காவுககு அனுப்பினர். அந்த இலாக்காவினர் இரண்டு மூன்று சப் இன்ஸ்பெக்டர்கள்-ஒரு பெரிய இன்ஸ்பெக்டர்—பத்து பதினைந்து போலீஸ் கான்ஸ்டேபிள்கள்—இவர்களோடு பரபரப்புடன் அந்த கிராமத்திற்குள் நுழைந்தனர். 'என்ன அதிசயமாக இருக்கிறதே!' என்று ஊர் மக்கள் எல்லாம் திரண்டு, "என்ன? என்ன?" என்று கேட்ட நேரத்திலே, போலீஸ் அதிகாரி, "எங்கே? அந்த வீடு? எங்கே அந்த வீடு" என்று கோபத்தோடு கேட்டார்.

"எந்த வீடு?" என்று மக்கள் கேட்க, கையில் மனுவை வைத்துக் கொண்டிருந்த பெரிய போலீஸ் அதிகாரி 'இங்கே யாருக்கோ தலை போய் விட்டதாமே?" என்று கேட்டார். பிறகு விஷயத்தை விசாரித்ததில் "தவலை போய் விட்டது" என்று எழுதச் சொன்னால், எழுதியவர் "தலை போய் விட்டது" என்று எழுதிவிட்டார்! அவரும் நான் சொன்ன அந்த பதினெட்டிலே இருக்கிறார்!

இத்தனைக்கும் இந்த நாட்டில் நம்முடைய மூதாதையர்கள் நாமெல்லாம் அறிவுச் செல்வத்தைப் பெறவேண்டுமென்ற காரணத்திற்காக கல்விக் கென்றே தனியாக ஒரு கடவுளைச் சிருட்டித்து—"சரஸ்வதி" என்ற திருநாமத்தைக் கொடுத்து—அழகான படத்தை வரைந்து கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு முன்னேற்பாட்டுக்கும் பிறகு நூற்றுக்கு 18 பேர்தான் படித்திருக்கிறோம் என்றால், இந்த அவல நிலையை எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும், எந்தக் கட்சியையும் சேராதவராக இருந்தாலும் போக்கவேண்டுமென்ற உறுதியை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அந்தத் துறையில் இந்தச் சிற்றூரைச் சேர்ந்த நண்பர் இராமையா அவர்களுக்கு நல்ல ஆர்வம் ஏற்பட்டதை நான் மெத்த வரவேற்கின்றேன். அவர்கள் இங்கக் கூட்டத் துவக்கத்தில் பேசியதை நான் கேட்டேன். மிகத் தெளிவோடும் உறுதியோடும் பேசுகிறார்கள். இந்தத் தெளிவும் உறுதியும் எதிலிருந்து கிளம்புகிறது என்று யூகித்தால், உள்ளத்திலே இருக்கின்ற தூய்மையிலே யிருந்துதான் பிறக்க முடியும்! இப்படிப்பட்ட சிற்றூர்களிலே அவரைப்போல் நாலைந்து பேர்—விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள்கிளம்பி பத்தாண்டுகளோ, ஐந்தாண்டுகளோ தொண்டாற்றுவார்களேயானால் கிராமங்களிலே இன்றைய தினம் இருக்கின்ற கவலையுள்ள நிலைமைகளை எல்லாம் நொடிப் பொழுதிலே மாற்றி அமைக்கமுடியும். இன்றைய தினம் அங்கெல்லாம் கல்வி பரவாததற்குக் காரணம் கல்வி கற்க வேண்டும் என்ற எண்ணம் பல பேருக்கு இன்றைய தினம் உதிக்காமல் இருக்கிறது. அதற்குக் காரணங்கள் மூன்று என்று நான் கருதுகிறேன்.

பரம்பரை பரம்பரையாக நம்முடைய எண்ணத்திலே ஏற்பட்டுக் கொண்டு வந்திருக்கிற ஒரு தன்மை, படிப்பு என்பது ஒரு சில இனத்தாருக்கு மட்டும்தான் வரும்; அவர்களுக்கு மட்டுமே உரிமை; படித்தால் அவர்களுக்கு மட்டும் தான் நலம்; நாம் எதற்காகப் படிக்க வேண்டும்?-என்ற அக்கறையற்ற தன்மை — முதல் காரணமாகும்.

கிராமப் புறங்களிலே இருக்கின்ற வறுமையால் ஆறு வயது, எட்டு வயது ஆன உடனேயே சிறுவனை தன்னுடைய தொழிலிலேயே ஈடுபடுத்தினால், தனக்குக் கிடைக்கின்ற சோற்றோடு இன்னும் ஒரு கவளம் அதிகம் கிடைக்காதா—என்ற பெற்றோர்களின் எண்ணம் இரண்டாவது காரணமாகலாம்.

மூன்றாவது காரணம், இத்தகைய கிராமப் புறங்களில் நல்ல பள்ளிகளை ஏற்படுத்த சர்க்காருக்கும் கவலை இருக்கவில்லை; அந்தக் கவலையை சர்க்காருக்கு நினைவுபடுத்தி இத்தகைய பள்ளிகளை அமைக்கச் சொல்லிக் கேட்பதற்கு மக்களுக்கும் உறுதி ஏற்படுவதில்லை.

அவர்களுக்கு அத்தகைய உறுதி இல்லாததற்குக் காரணம் இரண்டு என்று நான் கருதுகின்றேன். ஒன்று—கிராமவாசி படித்தால் என்ன லாபம் என்ற எண்ணமாக இருக்கலாம். மற்றொன்று—'இந்த மக்கள் நமக்கு சும்மாவா ஓட்டு போட்டார்கள்? நாலணா, எட்டணா வாங்கிக் கொண்டு தானே போட்டார்கள்? இவர்களுக்குப் பள்ளிக்கூடம் கட்டுவானேன்?' என்று கருதுவது மற்றொரு காரணமாக இருக்கலாம். இப்படி காரணம் எதுவாக இருந்தாலும் நிலைமையைப் பார்த்தால், பிற நாட்டார் பார்த்து பரிகசிக்கத்தக்க நிலையிலே நம் நாடு இருக்கிறது. இதை நம்முடைய தலைமுறையிலேயே நாம் மாற்றினால்தான் நாம் எடுத்துக் கொண்டிருக்கிற எல்லா அரசியல் முயற்சிகளும் பலிக்குமே தவிர—எல்லா சமுதாயத் திட்டங்களும் நிறைவேறுமே தவிர—சர்க்கார் ஏட்டில் பல கோடிக்கணக்கான ரூபாய்களைக் கல்விக்காகச் செலவிடுகிறோம் என்று எழுதி வைத்து—இப்படி நாட்டிலே கட்டிடங்களாக உருவாகா விட்டால் நல்ல பலன் ஏற்படாது.

ஆகவே தம்பி கருணாநிதி இத்தகைய நற்செயலில் ஈடுபட்டமைக்கு என்னுடையபாராட்டுதலையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவருக்கு ஊக்கத் துணை தந்து உடலுழைப்பு செய்த நண்பர் இராமையா அவர்களை நான் பாராட்டுகிறேன். என்னுடைய தம்பியை நீங்கள் மேலும் மேலும் இத்தகைய நல்ல காரியங்களில் இடையறாது ஈடுபடுத்த வேண்டும். என் தம்பி மிகவும் திறமைபடைத்தவர்; என்றாலும் "அண்ணா என்னைத் தட்டிக் கொடுக்க வேண்டும்" என்று கேட்டார்; அதைப் போல நீங்கள் கொஞ்சம் தூண்டிவிடுங்கள்; தம்பி இம்மாதிரியான காரியங்களில் ஈடுபடுவார்; பிறகு நான் வந்து தட்டிக் கொடுத்து விடுகிறேன்!

இதுபோன்ற கட்டிடத்தைக் கட்டி அது நல்ல முறையிலே பயன்பட வேண்டுமானால், கருணாநிதி குறிப்பிட்டதுபோல் இந்த வட்டாரத்திலேயுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதை குடும்பக் கடமையாக மட்டும் கருதாமல், சமுதாயக் கடமையாகக் கருத வேண்டும்! அப்போதுதான் சமுதாயத்தின் நிலை உயரும்; சமுதாயத்தின் நிலை உயர்ந்தால் தான் நம்முடைய உரிமைகள் எல்லாம் பாதுகாக்கப்படும்!

இன்றைய தினம் என்னைப் பொறுத்தவரை நான் பார்க்கிறேன். நம்முடைய மக்கள் உரிமைகளை உரத்தக் குரலில் கேட்பதற்கு ஓரளவுக்குத் தயாராகி இருக்கிறார்கள்.

நான் கேலியாகச் சொல்கிறேன் என்று யாரும் கருத வேண்டாம்; வரவேற்றுத்தான் சொல்லுகிறேன்; உரிமைகளைத் தட்டிக் கேட்க நாம் இன்றைய தினம் பக்குவமடைந்திருக்கின்றோம்! ஆனால் அந்த உரிமைகளை நாம் பக்குவமாக அனுபவிக்க வேண்டுமானால் அதற்கென்று இருக்கின்ற கடமைகளை நாம் நிறைவேற்றியாக வேண்டும். அந்தக் கடமைகளில் முக்கியமானது நமது அறிவுக் கண்களைத் திறந்து கொள்வது. அதற்கு இத்தகைய அறிவாலயங்கள் ஆங்காங்கே எழவேண்டும்; நித்த நித்தம் எழ வேண்டும்; வேகமாக எழ வேண்டும்; அப்படி எழ வேண்டுமானால் நல்ல எண்ணம் படைத்தவர்கள் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுவதில் சிறந்த பெருமை அடைய வேண்டும்.

சென்ற தலைமுறையிலும், அதற்கு முந்திய தலைமுறையிலும் ஆண்டவனுக்கு ஆலயங்கள் அமைப்பதில் பெருமை இருந்திருக்கலாம். ஒரு சமயம் புண்ணியங்கள் கூட இருந்திருக்கலாம்—அவைகளை எல்லாம் நான் இந்தக் கூட்டத்திலே ஆராய விரும்பவில்லை. ஆராய்ந்தால், பாவம்—எத்தனையோ



கட்டிடத் திறப்பு விழாவில் ஆசிரியர் மு. க. பேசுகிறார். அறிஞர் அண்ணாவுக்கு அருகில் உட்கார்ந்திருப்பவர்கள்: 1. விழாத் தலைவர் திரு ஆரோக்கியசாமி, 2. காட்டூர் ஊராண்மைக் கழகத் தலைவர் திரு கே. வி. இராமையா.

—புகைப் படம் : சௌந்தர், மாயவரம்

ஜூலை 24-ம் தேதி வெளிவருகிறது!

"திராவிட சினிமா"

ஆசிரியர் : ஏ. வி. பி. ஆசைத்தம்பி

விலை 10 புதுக் காசு

[பிரதி ஒன்றுக்கு 40 புதுக்காசு வீதம் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் நாடெங்கும் தேவை. பணத்துடன் விண்ணப்பிக்கவும்.]

"திராவிட சினிமா" :: சென்னை—5

குடகனாறு கோரிக்கை 'கூடை'யில் தூங்குவதேன்?

✻ 5-ம் பக்கத் தொடர்ச்சி

நிலம் பயன் பெறுகிற நேரத்தில், ரூ. 12 இலட்சம் செலவில் 10 ஆயிரம் ஏக்கரா நிலம் பயன் பெறுகிற ஒரு குடகனாறு திட்டத்தை இது வரை—இவ்வளவு கோரிக்கைகளுக்குப் பிறகும்—அந்த வட்டாரத்து மக்கள் அத்தனை பேரும் மனு செய்துகொண்ட பிறகும்—மந்திரிகள் வந்த நேரத்தில் அவர்களைத் தூது சென்று பார்த்த பிறகும் கவனிக்கப்படவில்லை என்பது மிகவும் வருந்தத் தக்க ஒன்று.

மேற்கு நோக்கி ஓடுகிற ஆறுகளை எல்லாம் கிழக்கு நோக்கித் திருப்புவதற்கு முயற்சிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. பரம்பிக் குளத்துத் தண்ணீரை தமிழகத்துக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு பெருமுயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே தவிர, ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் அந்தத் திட்டம் கவனிக்கப்பட்டு, பரம்பிக்குளம் தண்ணீர் பயன்பட முயற்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை.

இங்கே ஆறுகள் இல்லை; ஆகவே திட்டங்கள் இல்லை என்று கூறுவது, 'ஆடத் தெரியாத ஒருத்தி முற்றம் கோணல்' என்று சொல்வதை ஒக்கும் என்று நான் குறிப்பிடுகிறேன். ஆறுகள் இல்லை என்றாலும், இருக்கிற ஆறுகளையாவது பயன்படுத்துகிற அத்தகைய எண்ணம் ஏன் பிறக்கவில்லை என்று நான் கேட்கிறேன்.

புராணத்திலே படித்தது உண்டு—பகீரதனுக்காக பரமசிவன் ஆகாயத்திலிருந்து கங்கையை வரவழைத்தான்,' என்று! அப்படியிருக்க, பச்சைத் தமிழர் ஆட்சியில் பரம்பிக்குளம் தண்ணீரைத்தானா வரவழைக்க முடியாது? கொஞ்சம் எடுத்துப் பேசினால்—உற்சாகத்தோடும் அக்கறையோடும் அந்த வேலையில் ஈடுபட்டால், ஆகாத காரியமா இது?—என்று நான் கேட்கிறேன்.

திட்டங்கள் பல இருக்கின்றன; அவைகள் நிறைவேற்றப்படவேண்டும். நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்கள் இவ்வளவு காட்டியும்கூட அவைகளை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையே என்று எதிர்க் கட்சிக்காரர்களைப் பார்த்துச் சொன்னால், அந்தத் திட்டங்கள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்; குடகனாறு திட்டம் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்கிற சொல்ல விரும்புகிறேன்.

வெள்ளியணைப் பகுதியில் சென்று மந்திரி அவர்கள் சுற்றிப் பார்த்தால் அங்கு இருக்கும் அவல நிலை தென்படும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். குளித்தலை வட்டாரத்தில் 273 குளங்கள் இருக்கின்றன. அந்த 273 குளங்களும் மழையை நம்பித்தான் நிறைய முடியும். அந்த 273 குளங்களில் வரும் மழைத் தண்ணீரைக் கொண்டு பெரும் பகுதி நிலத்தை நல்ல முறையிலே வளப்படுத்த முடியும். அதற்கான முயற்சிகளும் இந்த அரசாங்கத்தாரால் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் கோருகிறேன்.

திட்டங்களைக் கூறிவிடுவதால் மட்டும் போதாது; அந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிற ஆற்றலும் அத்தகைய திறமையும் ஒரு அரசு பெற வேண்டுமென்றும், அப்படிப் பெற வேண்டிய நிலையைத்தான் வள்ளுவர் அவர்கள் 'கொடுங்கோன்மை' அதிகாரத்தில் அல்ல—'அமைச்சு' என்ற அதிகாரத்தில் மிக அழகாக எடுத்துச் சொல்லுகிறார்.

"முறைபடச் சூழ்ந்தும்
முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்"

நல்ல திட்டங்களைப் போட்டாலுங்கூட, அந்தத் திட்டங்களை முறையாக எண்ணினாலும்கூட, அந்தத் திட்டங்களை மூளியாகச் செய்து முடிப்பார்கள் திறமை இல்லாதவர்கள் என்று கூறியிருக்கிறார்."

நான் இந்த அரசாங்கத்தை, அப்படிச் செய்வார்கள் என்று கூறவில்லை; அப்படிச் செய்யக் கூடாது என்றுதான் கூறுகிறேன். நாம் குறளை எடுத்துக் கூறினால், வல்லினம், மெல்லினம் தெரியாதவர்கள் குறள் பற்றிப் பேசுகிறார்கள் என்று கூறி விடலாம் அமைச்சர் அவர்கள்! வல்லின—மெல்லினம் தெரிகிறதோ இல்லையோ நான் சார்ந்த இனம் தமிழினம்—திராவிட இனம் என்பதை உணர்ந்திருக்கிறேன். அதை உணர்த்தி, இந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் தமிழகத்திற்கு உள்ளபடியே பயன்படுவதற்கு சென்னை மாநில அரசு உடனடியாக வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்

விழிப்பு - இப்போதுதானா?



காலமெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு தூங்கினார்கள். வெளிநாட்டுச் செலவாணி வீணாவது குறித்துக் கவலைப்படாது காலங் கழித்தார்கள். இப்போதுதான் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். இறக்குமதிக் கொள்கையை இழுத்துப் பிடிக்கிறார்கள். இந்த முறைகெட்ட செயலை விளக்குவதுதான் டெல்லி 'சங்கர்ஸ் வீக்லி'

✻ 7-ம் பக்கத் தொடர்ச்சி

பேருடைய மனதிலே இருக்கின்ற நல்ல ஆசைகளை நான் கலைத்து விட்டதாகிவிடும். ஆகவே அந்தக் கணக்கு ஒரு பக்கத்திலே இருக்கட்டும். இந்தப் புதிய கணக்கை நம்முடைய சமுதாயத்திலே போட வேண்டும். இந்தப் புதிய கணக்குக்கு ஏடு இங்கேயே இருக்கிறது; மேலே அல்ல! அங்கே நீங்கள் எதைக் கண்டாலும் இங்கே வந்து திருப்பிச் சொல்ல முடியாது; இங்கே நீங்கள் காணுகின்ற எதையும் மற்றவர்களுக்குச் சொல்லலாம். ஆகவேதான், பெரிய பெரிய வேதாந்திகளும் சித்தர்களும் "கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர்" என்று ஆண்டவனைப் பற்றியும், மேல் உலகத்தைப்பற்றியும் சொன்னார்கள்.

அதைக் கண்டவர் விண்டிலர் —அதாவது எடுத்துச் சொல்ல மாட்டார்கள். எடுத்துச் சொன்னவர்-அதைக் கண்டதேயில்லையாம்! இதோ, இங்கே நீங்கள் பார்க்கிறீர்கள்: அதை மக்களுக்கு எடுத்துச் சொல்லலாம். நீங்கள் சொல்லுகிறீர்கள்; அதை மக்கள் காண்கிறார்கள். இங்கு நடக்கின்ற விழாவைக் காண வேறு சிற்றூர்களிலிருந்து வந்திருக்கின்ற நல்ல எண்ணம் படைத்தவர்கள் இந்தக் கட்டிடத்தையும் பார்த்து—இதை உருவாக்கிய இராமையா அவர்களையும் பார்த்து — அவருக்குத் துணை நின்ற கருணாநிதியையும் பார்த்து—இந்த விழாவிலே இவ்வளவு மகிழ்ச்சி தாண்டவமாடுவதையும் பார்த்து — வீடு திரும்புகின்ற நேரத்தில் — நம்முடைய சிற்றூரிலும் இதைப் போன்ற ஒரு அறிவாலயம்; அறிவுக்குத் துணையாக இருக்கக் கூடிய ஒரு படிப்பகம்—போன்ற நாட்டுக்குப் பணியாற்றக் கூடிய நல்ல அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணமிட்டுக் கொள்ள வேண்டும்.

ஏனெனில், நான் நிச்சயமாகச் சொல்லுவேன், எவ்வளவுதான் இந்த 1957-ம் ஆண்டு வரையில் பணத்துக்கு மதிப்பு இருந்தாலும், நிச்சயமாக பத்து ஆண்டு காலத்திற்குப் பிறகு—அல்லது இருபது ஆண்டு காலத்திற்குப் பிறகு பணத்திற்கு இருக்கின்ற மதிப்பு வேகமாகக் குறைந்து கொண்டுவரும்; புகழுக்கு இருக்கின்ற மதிப்புதான் வளரும்! அந்தப் புகழைத் தேடிக் கொள்வதென்பது தன்னலத்தின் பாற்பட்டதல்ல: சுயநலத்தின் பாற்பட்டதல்ல; புகழோடு வாழ்தல் என்பது தமிழனுடைய பழக்கங்களில் ஒன்று! ஈதல்; இசைபட வாழ்தல்—என்ற இரண்டையும் தமிழனுக்கு ஈராயிரம் ஆண்டு காலத்திற்கு முன்னாலேயே அவனிடையே வாழ்ந்த பெரும் புலவர்கள் அறிவுறுத்திச் சென்றிருக்கிறார்கள்.



சென்ற 7—7—57 அன்று மாலை திருவாரூரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா உரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே இந்தக் கட்டிடத்தைக் கட்டுவதும், இங்குள்ள கல்லிலே பெயரைப் போட்டுக் கொள்வதும் அவரவர்கள் புகழைத் தேடிக் கொள்ளத்தானே—என்று எங்கேயாவது இருக்கும் சில ஏனோதானோக்கள் பேசினாலும், நீங்கள் அவர்களிடத்திலே தாராளமாக—தைரியமாகச் சொல்ல வேண்டும், "ஆம்! ஈதலும் இசைபட வாழ்தலும் தமிழனது நெறி என்று நெடுங் காலத்துக்கு முன்னேயே காட்டியிருக்கிறார்கள். நாங்கள் இதோ. ஈந்தோம்; இசைபட வாழுகின்றோம்! நீ ஈந்தது என்ன?" என்று இராமையா அவர்கள் ஈயாதாரைப் பார்த்துக் கேட்க வேண்டும். ஏன் அவர் கேட்க வேண்டும் என்று சொன்னேன் என்றால், அவர்கள் கேட்டால் யாருக்கும் கோபம் வராது; பக்குவமாகப் பேசுகிறார்கள். ஆகவேதான் அவருக்கு மட்டும் சொன்னேன்; தம்பி கருணாநிதிக்குக் கூடச் சொல்லவில்லை. ஏனெனில் நாங்கள் எப்போதும் காரசாரமாகப் பேசிப் பழக்கப்பட்டவர்கள். ஆகவே எங்களிடம் யாராவது வந்து கேட்டால், "ஆகா! தெரியும்; தெரியும்! நீ கொடுத்தது தெரியாதா?" என்று கோபமாகக் கேட்டுவிடுவோம்; கேட்டவரின் மனம் புண்பட்டுவிடும். ஆகவே அப்படி இன்றி இராமையாவைப் போன்றவர்கள் "ஈந்தோம்; இசைபட வாழுகின்றோம்! நீங்களும் ஈந்தால் இசைபட வாழலாம்!" என்ற நற்செய்தியை நாடு முழுதும் பரப்ப வேண்டும்.

அதற்காகவேதான் இத்தகைய விழாக்கள் நடத்தப்படுகின்றனவே தவிர, இந்தக் கட்டிடத்திற்குத் திறப்பு விழா நடத்தாவிட்டால் அது திறந்து கொள்ளாது என்று பொருள்? அல்லது பழைய காலத்து நாயன்மார்கள். மூடியிருந்த திருத்தலத்திற்கு எதிரிலே நின்று ஒரு பதிகம்பாட. ஒரு கதவு திறந்துகொள்ள—இரண்டாவது பதிகம் பாட.. மற்றொரு கதவு திறந்து கொள்ள—அதற்குப் பிறகு அடியார்கள் எல்லாம் உள்ளே நுழைந்தார்கள் என்பார்களே; அதுபோல நான் வந்து ஏதோ பேசியபிறகு தான் கதவு திறக்கும் என்பது போன்ற வைதீகச சடங்கல்ல இது! நாங்களும் வந்திருந்து, நீங்களும் வந்திருந்து இத்தகைய நல்ல காரியத்திலே பங்குகொள்கிறோமென்றால், நாடு பூராவும் இந்நிகழ்ச்சியைக் கவனித்து, இதைப்போல் நாடெங்கும் நல்ல அமைப்புகள் ஏற்பட வழி செய்ய வேண்டும் என்பதற்காகத்தான்.

நேற்றும், அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னேயும் சட்ட மன்றத்திலே அமர்ந்திருக்கின்ற நேரத்தில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் எதிர்க் கட்சிக்காரர்களாகிய நாங்கள் அவரோடு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நாட்டை ஆளுகின்ற கட்சிக்கும், சர்க்காருக்கும் நான் தருகின்ற ஒத்துழைப்பும். என் தம்பிமார்கள் தருகின்ற ஒத்துழைப்பும் இந்த நல்ல நிகழ்ச்சிகளைப் போல நிச்சயம் அமைந்திருக்கும் என்பதை இந்தக் கூட்டத்தின் வாயிலாக அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட ஒத்துழைப்பு நாங்கள் எந்தக் கட்சியைச்

✻ 12-ம் பக்கம் பார்க்க

திருவாரூர் பொதுக் கூட்டத்தில் திரண்டிருந்த பொது மக்கள்!

—புகைப் படங்கள் : கிருஷ்ணா ஸ்டுடியோ, திருவாரூர்.

குளித்தலை வட்ட

விவசாயிகள் முன்னேற்ற சங்கம்

[14—7—57 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு குளித்தலை வட்ட விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம், குளித்தலையைச் சேர்ந்த நங்கவரத்தில் நடைபெற்றது. அப்போது தலைவராக தி. வீ. முத்து கிருஷ்ணன், துணைத் தலைவராக கு. சண்முகம், செயலாளராக க. முத்து, பொருளாளராக க. கருப்பண்ணன், செயற்குழுவினராக அ. மூக்கன், ச. பரிமணம் அ. காளி, இரா. மொட்டையாண்டி, பி. மருதமுத்து, ம. பொன்னன், வை, தங்கவேலு—ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அன்று மாலை 3-மணிக்கு விவசாயிகளின் மாபெரும் ஊர்வலம் நங்கவரம் கிராமத்திலிருந்து புறப்பட்டு, பொய்யோமணி, பேட்டைவாய்த்தலை வழியாக குளித்தலை வ. உ. சி. சதுக்கத்தில் வந்து சேர்ந்தது. ஊர்வலத்தில் கலந்து கொண்ட விவசாயிகள், திராவிட முன்னேற்றக் கழக இருவர்ணக் கொடிகளை ஏந்தி வர, ஊர்வலத்தின் முன்னால் இரு வர்ணக் கொடி, உதய சூரியன் சின்னம் பொறிக்கப்பட்டு, கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது.

ஊர்வலத்தினர் "நியாய வார சட்டத்தைத் திருத்துக" "நில வெளியேற்றம் நியாயமல்ல" "விவசாயிகள் முன்னேற்றச் சங்கம் வாழ்க"—போன்ற ஒலிகளை முழங்கி வந்தனர்.

பிறகு மாலை 7-மணியளவில், வ. உ. சி. சதுக்கத்தில் கவண்டம்பட்டி தோழர் க. முத்து அவர்கள் தலைமையில் மு. கருணாநிதி அம்பில் தருமலிங்கம், பொன்மலை பராங்குசம், திருச்சி மணி, குளித்தலை தி. வீ. முத்துகிருஷ்ணன், வை. சிவராஜ் ஆகியோர் விவசாயிகளின பிரச்சினை குறித்து நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

மு. கருணாநிதி அவர்களுக்கு விவசாயிகள் முன்னேற்ற சங்கத்தின் உட்கிளைகள் பலவற்றின் சார்பாக மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. பேட்டைவாய்த்தலை தி மு. க. சார்பில் கைத்தறி ஆடையும், நெசவுத் தொழிலாளர்கள் சார்பாக நூல்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

கூட்டம் இரவு 11 மணியளவில். தோழர் தி. வீ. முத்து கிருஷ்ணன் நன்றி நவில இனிது முடிந்தது.

பொதுக்கூட்டத்தில் விவசாயிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. சர்க்காரால் கொண்டு வரப்பட்டிருக்கும் நியாயவார சட்டத்தின் விளைவு, பெரிதும் விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய நிலையிலிருப்பதால் உடனடியாக அதை திருத்தி விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கச் செய்யுமாறு சென்னை அரசினரை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

2 நியாயவாரச் சட்டம் திருத்தி அமைக்கப்படும்வரை விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதை தடை செய்யுமாறு கேட்டுக் கொள்வதோடு, 'நில வெளியேற்றத் தடுப்புச் சட்டம்' அமுலில் இருந்தும் பல ஏழை விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவது கண்டு இக்கூட்டம் வருந்துவதோடு, மிராசுதாரர்களால் ஏற்படும் தொல்லைகளிலிருந்துவிவசாயிகளைக் காப்பாற்றி அவர்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

3. குளித்தலை வட்ட விவசாயிகள் பிரச்சினையைப் பற்றி சென்னை முதல் மந்திரி திரு. காமராசர் அவர்களையும், விவசாய மந்திரி திரு பக்தவத்சலம் அவர்களையும். ரெவின்யூ மந்திரி திரு. மாணிக்கவேலர் அவர்களையும் சந்தித்து, நிலைமைகளை எடுத்துக்கூறி, தெளிவுபடுத்தி, பரிகாரம் தேட, மு கருணாநிதி அவர்கள் தலைமையில், திருச்சி மாவட்ட தி. மு க. செயலாளர் அம்பில் தர்மலிங்கம், கவண்டம்பட்டி க. முத்து, குளித்தலை தி. வீ. முத்துகிருஷ்ணன், பணையூர் அ காளி, நங்கவரம் ச. பரிமணம்—ஆகியோரைக்கொண்ட தூதுக்குழு செல்வதென தீர்மானிக்கப்பட்டது.

[குறிப்பு: நில வெளியேற்றத்தின் காரணமாக குளித்தலை விவசாயிகள் 8 பேரை குளித்தலை போலீசார் கைது செய்து பாதுகாப்பில் வைத்தனர். சண்முகம், ஆறுமுகம், குன்னுடையான உட்பட எட்டுபேர்களை ஜாமீனில் விடும்படிக் கேட்டதற்கு போலீசார் ஜாமீனில் விட மறுத்து விட்டனர். பிறகு மு கருணாநிதி அவர்கள் குளித்தலை போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று கைதிகளான எட்டு விவசாயிகளையும் ஜாமீனில் வெளியே விட உதவி செய்தார்.

●●●

முகவரி மாற்றம்:

க. அறிவழகன், எம். ஏ.
9—சி, அக்பராபத் 2-வது தெரு,
கோடம்பாக்கம்.
சென்னை—24.

விற்பனையாகிறது!
கவிஞர் கண்ணதாசன்
எழுதிய
"உயிர் ஓவியங்கள்"
விலை ரூபாய் ஒன்று
விவரங்கட்கு:
பி. இராமசுவாமி அன் பிரதர்ஸ்,
"முத்து மாளிகை" :: சென்னை-4

பிறைவானம் . . .

❋ 11-ம் பக்கத் தொடர்ச்சி

மாயாண்டியை எப்படியும் பார்த்துவிட வேண்டும்; அவனது அவல நிலைக்கு என்னதான் காரணம் என்று கேட்டுவிட வேண்டும் — என்ற எண்ணத்துடன் அன்று நான் தோட்டத்திற்குச் சென்றேன். ஆனால், என்ன ஏமாற்றம்! மாயாண்டி அங்கில்லை. தலை மறைவாகப் போய் விட்டானாம். பின்...? போலீசின் துப்பாக்கி முனை 'எங்கே? எங்கே?' என்று தேடிக் கொண்டிருந்த போது அவன் என்ன செய்ய முடியும்? சாவதுக்குத் துணிந்தவனல்லவே அவன்! சங்கம் அமைத்து சகோதரத் தொழிலாளர்களின் நல் வாழ்வுக்குப் போராட எண்ணியவனாயிற்றே! அவனுக்கா இந்நிலை? அதுவும் என் தந்தையினால்' காலமெல்லாம் உழைத்தவன்-கல்லினும் கொடிய நெஞ்சு படைத்த அப்பா கருநாகத்தினும் கொடிய நஞ்சையல்லவா அவன் வாழ்வில் கலந்து விட்டார்!

நான் நடந்துகொண்டே இருந்தேன், இப்படி பல எண்ணங்களுடன். என்ன ஆச்சரியம்! திடீரென்று வானம் இருண்டது; மின்னல் மின்னியது; இடி இடித்தது; கண நேரத்தில் 'சோ' வென்ற இரைச்சலுடன் பெரு மழை பொழிய ஆரம்பித்து விட்டது. மழையில் நனைந்து—குளிரில் நடுங்கி நான் செய்வதறியாது நின்றேன். அப்போது...? என்ன கொடுமை! என் எதிரில் சிறிய மலைபோல் ஊர்ந்து வந்துகொண்டிருந்தது பெருங் கரடி ஒன்று! நான் பயந்து நடுங்கி 'வீல்' என்று அலறினேன். மறுகணம் என்னை நோக்கிப் பாய்ந்தது கரடி!

ஆனால்......கண நேரத்தில் நான் சற்றும் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று அங்கே நடைபெற்றது. என்னை நோக்கிப் பாய்ந்த கரடியின் மீது மூர்க்கத்தனமாகப் பாய்ந்தது வேறு ஒரு மனித உருவம்! என்ன கோரம்! சிறிது நேரத்தில் அங்கே ஒரு பயங்கரப் போராட்டம் நடைபெற்றது! மிருகத்திற்கும் மனிதனுக்கும் போராட்டம் — முடிவு எப்படி இருக்கும் என்பதை யூகித்துக் கொள்ள முடியாதா உங்களால்! கரடி மிரண்டோடியது; ஆனால் அதை எதிர்த்த மனித உருவத்தை குற்றுயிராக ஆக்கிவிட்ட பின்புதான்.

மழை நிற்கவில்லை. நீண்ட நேரம் மழையில் நனைந்ததால் என் உடல் நடுக்கம் அதிகரித்து விட்டது. அப்போதுதான் கரடியோடு போரிட்டு என்னைக் காப்பாற்றிய அந்த உருவம் என்னை நோக்கி வருவதை உணர்ந்தேன். நான் கூர்ந்து கவனித்தேன். என்ன ஆச்சரியம்! அவன், மாயாண்டி!... தள்ளாடி நடந்து வந்த மாயாண்டி என்னை தன் தோளில் தூக்கிக் கொண்டான்.

நான் பயந்தேபோய்விட்டேன். மாயாண்டி என்னை எங்கே தூக்கிச் செல்கிறான்? அப்பாவைப் பழி வாங்கப் போகிறானா? அதற்காக என்னை அடித்துக் கொள்ளப் போகிறானா? அப்படியானால் என்னை ஏன் மரணத்திலிருந்து மீட்க வேண்டும்?

இந்தக் குழப்பத்தில் என்னவாகுமோ; ஏதாகுமோ என்று நான் தவித்துக் கொண்டிருந்த போது; மழை வெள்ளத்தில் சிக்கித் தடுமாறி என்னை என் பங்களாவிற்கே தூக்கிக் கொண்டு வந்து சேர்ந்தான் மாயாண்டி.

"ஆ" என்று அலறிக் கொண்டே ஓடிவந்தார் என் அப்பா! மாயாண்டி என்னைக் கீழே இறக்கி விட்டதும், என்னை கட்டி அணைத்துக் கொண்டார். நான் நடந்தவை சொல்லி, என்னை சாவிலிருந்து மீட்ட மாயாண்டியைக் காட்டினேன். அப்பா அப்போதுதான் அவனைக் கவனித்தார். கண நேரம்தான்...

கரடியின் கடிகளால் உடலெங்கும் இரத்தம் சொட்டிக் கொண்டிருந்த மாயாண்டியை நோக்கித் தாவினார். இறுகத் தழுவிக் கொண்டார். "என்னை மன்னித்து விடு மாயாண்டி!" என்று அலறினார்.

அப்பாவின் பெருந் தன்மையே தன்மை!

ஆனால் அதே நேரம் மாயாண்டியைத் தொடர்ந்து வந்த இரகசியப் போலீசார் தூரத்திலிருந்து அப்பாவும் மாயாண்டியும் கட்டித் தழுவிக் கொண்டிருந்த காட்சியைக் கண்டு விட்டனர்.

★

மறுநாள் செய்தித் தாள்களில் இப்படி செய்தி வந்தது:

"பயங்கரவாதி மாயாண்டிக்குத் தூக்குத் தண்டனையும், அவனுக்கு தன் வீட்டிலேயே அடைக்கலம் கொடுத்த இனத் துரோகி தோட்ட முதலாளிக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது!"

★

பையன் கதையை முடித்தான் அவன் மாயாண்டியின் குடும்பத்தாரைத் தேடுவதின் காரணம் புரிந்துகொண்டேன். இந்தக் கதையால் தங்கைக்கு குறளுக்கான பொருளும் புரிந்திருக்கும்!

உங்களுக்குப் புரிகிறதா? எந்நன்றி கொன்றவருக்கும் தப்ப வழியுண்டு; மாயாண்டி செய்த நன்றியை மறந்த வெள்ளைக்காரத் துரை போன்றவர்களுக்கு தப்ப வழியேயில்லை, நீதியின் கண்களிலிருந்து!

—சொர்ணம்

★ குறள் விளக்கக் கதை: ★

"எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு—

—இந்தக் குறளுக்கு என்ன அண்ணு பொருள்?' என்று கேட்டுக்கொண்டே வந்தது தங்கை.

குறள் இரண்டு வரிகள்தான். ஆனால், அந்த இரு வரிகளுக்குரிய பொருள், அளவற்றது; விலையற்றது என்று உலகம் முழுதும் ஒப்புக்கொள்கிறது. ஆமாம்; வள்ளுவரால் உலகிற்கு போற்றிப் புகழ வேண்டிய ஒரு ஒப்பற்ற களஞ்சியமே கிடைத்திருக்கிறது; ஆனால், இங்கே, குறளுக்குப் பொருள் கேட்டு வந்த தங்கைக்கோ ஒரு கதையே கிடைக்கிறது.

தினம் தினம் நாம் எத்தனையோ பிச்சைக்காரர்களை சந்திக்கிருேம். நடைபாதை ஓரங்களில்-பஸ் நிற்குமிடங்களில்—உணவு விடுதி வாசல்களில்...அப்பப்பா! எண்ணற்ருேர்; எண்ணற்ருேர்! ஆனால் அவர்களது தோற்றத்தையும், கூக்குரலையும் கேட்கும்போது ஆயிரத்தில் ஒருவருக்குக்கூட மனமிரங்காத நிலையையும் காணும்போது உண்மையில் எத்தகைய மனவேதனை உண்டாகிறது! அவர்களது கலங்கிய கண்களில்—கண்களிலிருந்து வழியும் கண்ணீரில் நிச்சயம் ஒரு சோகமான கதை மறைந்து கிடக்கும்.

ஆனல் நான் தினம் தவருது சந்தித்துக் கொண்டிருக்கும் அந்தப் பிச்சைக்காரச் சிறுவனின் கதையோ மிகமிகவேதனையானது. சென்னைத் தெருக்களில் அனுதை போல் அவனைநடமாடவிட்ட அந்த சோகச் சம்பவக் கோர்வைகள் எந்தக் கதாசிரியரின் கற்பனையிலும் உதிக்க முடியாதது என்றுதான் நான் கருதுகிறேன்.

அவன் விசித்திரமான பிச்சைக்காரன்—அவன் தோலின் நிறம் வெள்ளை! வெள்ளைக்காரச் சிறுவன் நம் நாட்டிலே பிச்சைக்காரனுக அலைவது விசித்திரம்தானே!

ஒருநாள் அவன் பாடிக்கொண்டு வந்தான், ஆங்கிலத்திலே. புரியாத பாடல் அது. நான் அந்தச் சிறுவனை அருகழைத்தேன். "யாரப்பா நீ?" என்று பரிவுடன் கேட்டேன். அவன் மிரள மிரள விழித்தான் கணநேரம்.

"உங்களுக்கு மாயாண்டியின் அப்பா, அம்மா, மனைவி, குழந்தைகள், எல்லோரையும் தெரியுமா?" என்று பதில் கேள்வி கேட்டான், ஆங்கிலமும் தமிழும் கலந்த 'கதம்ப' மொழியில்!

எனக்கு எந்த மாயாண்டியையும் தெரியாதே! மேலும் நான் என்ன சொல்வது என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே, அவன் மறுபடியும் பேசினுன். "நான் அவர்களைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். அதற்காகவேதான் மலேயா நாட்டிலிருந்து இங்கு ஓடி வந்தேன். கிடைப்பார்களா? நான் தேடிவந்த மன்னிப்பு கிடைக்குமா?...உம்..." என்றபடி எங்கேயோ தூரத்தில் தன் பார்வைச் செலுத்தினுன்.

அவன் பேச்சு எனக்குப் புதுமையாக இருந்தது. "ஏ, பிச்சைக்காரத் தம்பி! நீ யாரப்பா? அதைச் சொல் முதலில்!" என்றேன்.

"உஷ்...நான் ஒன்றும் பிச்சைக்காரனில்லை!.......ஜாக்கிரதை!"—அவனுக்குத்தான் என்ன துணிச்சல்! எங்கிருந்தோ பிழைக்க வந்தவன் என்னையே மிரட்டுகிருனே! நான் அவனிடம் கோபித்துக் கொள்ளும் நிலையில் இல்லை; ஏனெனில் அவனது அந்தக் குறுகிய கால வாழ்வுக் காலத்தில ஒரு மிகச் சோகமான — ஆனல் சுவையான கதை நிச்சயம் இருக்கிறது என்பதை நான் யூகித்துக் கொண்டுவிட்டேன். அப்புறமும் விடுவேனு? அவனைப் பக்கத்திலே இருத்திக கொண்டு பேசினேன். அவனும் தமிழும் ஆங்கிலமும் கலந்து பேசினுன்; குமுறினுன்; கொந்தளித்தான்; கண்ணீர் விட்டான்; கதறியழுதான்! அந்த அப்பாவித் தம்பியின கதையை இதோ அவனே சொல்லுகிருன்; கேளுங்கள்:

* * *

"நான் இந்தநாட்டு மண்ணையே மிதிப்பேன் என்று கனவுகூடக் கண்டிருக்கமாட்டேன். ஏன்; இந்த 'இந்தியா'வைப் பற்றியே எனக்கு இரண்டு சம்பவங்களிலுல்தான் தெரியும்!

பள்ளிக்கூட ஆசிரியர் ஒருமுறை சொல்லியிருக்கிருர், பூகோளப் படத்தை எடுத்து கையிலே வைத்துக் கொண்டு "முப்புறமும் கடலால் சூழ்ந்து—ஒரு புறம் மலை நிற்கும் பாதுகாப்பு மிக்க நாடு! செழுமை மிக்க தேசம்!" என்று சொல்லியிருக்கிருர்.

இந்தக் கூற்றில் நான் சந்தேகப் பட நடந்தது. மற்ருெரு சம்பவம்...நான் எங்கள் வீட்டு மூன்ருவது மாடியில் என் அப்பாவின் மடியிலே தவழ்ந்துகொண்டிருந்த போது, தூரத்திலே இருந்த எங்கள் தேயிலைத்தோட்டம் என் கண்களில் தென்பட்டது. "ஏனப்பா! நம்ப தோட்டத்திலே வேலை செய்கிருர்களே கூலிகள்—மாயாண்டி போன்றவர்கள்—எல்லாம் கருப்பாக இருக்கிருர்களே; அவர்கள் எந்த ஊர்?" என்று கேட்டேன்.

"இந்தியாவைச் சேர்ந்தவர்கள்!" என்ருர் என் அப்பா சட்டென்று!

எனக்கு அக்கணமே 'இந்தியா செழுமையான தேசம்' என்று பூகோள ஆசிரியர் சொன்ன வாசகங்கள்தான் நினைவுக்கு வந்தது. தொடர்ந்து வேறு சந்தேகம் ஒன்றும் தோன்றிவிட்டது.

செழுமையான நாட்டினனுன மாயாண்டி, என் அப்பாவைப் போல் தோட்டச் சொந்தக்காரராக மாடியில் வசிக்காமல்—மலேயா மண்ணிலே ஏன் அடிமையாக—கூலியாக வதைபட வேண்டும்?

இந்தச் சந்தேகத்தை நான் மாயாண்டியிடமே கேட்டுவிடத் துடித்தேன்.

* * *

அன்று மாயாண்டியை என் அப்பாவின் முன்னல் சந்தித்தபோதும் அதைத்தான் நினைத்தேன். ஆனல் எப்படிக் கேட்பது? அப்பா கோபத்தின் உருவமாக நின்ருர். மாயாண்டி உண்மையான 'தோட்டத் தொழிலாளி'யாக நின்ருன், பயந்த சுபாவத்துடன்.

ஆனல் அப்பாவோ, எரிமலை உச்சியில் நிற்பவரைப் போலத் துடித்துக் கொண்டிருந்தார். 'வெள்ளைக்காரத்துரை நான்—தோட்டத்துக்குச் சொந்தக்காரன்—உனக்கு முதலாளி—கவனமிருக்கட்டும், என்ற தோரணை அவர் பயங்கரப் பார்வையில எதிரொலித்தது.



"மாயாண்டி! உன் போக்கு என் கோபத்தின் எல்லையைத் தேடிக் கொண்டிருக்கிறது. சங்கமாம் சங்கம்! இதனுல் உனக்குச் சங்கடங்கள் அதிகம் நேரப்போகிறது மாயாண்டி! போலீஸ் ரிக்கார்டில் உன் பெயர் 'பயங்கரவாதிகள்' பட்டியலில் இடம் பெறுவதற்கு முன் நான் சொல்வதைக் கேள். நம் தோட்டத்திற்குள் எந்த வித சங்கமும் அமைக்காதே! குழப்பம் உண்டாக்காதே!' — அப்பாவின் குரல் இவ்வளவு கோரமாகவும் இருக்கும் என்பதை நான் அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். எனக்கென்னவோ பயமாக இருந்தது. ஆனல் மாயாண்டியோ தாழ்ந்து கிடந்த தலையை நிமிர்த்தி கொஞ்சமும் பயப்படாமல் பேசினுன்.

"ஐயா, நீங்கள் எங்கள் முதலாளி என்பதற்காக உங்கள் மூர்க்கத்தனத்திலிருந்து எங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும்-உரிமைக்கு வழக்காடவும் சங்கம் அமைப்பதில் தவறமாட்டோம்!"-மாயாண்டியின் குரலில் உறுதி இருந்தது.

துரையின் உடல் துடிதுடித்தது. "ஆகா, உனக்கு என்ன திமிர்! மாயாண்டி, இன்றைக்கே நீ ஒரு பயங்கரவாதி என்று போலீசுக்குத் தெரிவித்து விடுகிறேன். உன்னைக் கண்ட இடத்திலே சுட்டுக் கொல்ல போலீஸ் அலையும்! நீ நாடுவிட்டு நாடு வந்து நாதியற்ற பிணமாகச் சாகப் போகிருய்...!"—அப்பா அலறினுர்.

"கவலையில்லை...உன்னுல் ஆனதைப் பார்த்துக்கொள். பணப் பூதமே!" என்ருன் மாயாண்டி.

மறுகணம் அப்பாவின் கைத்தடி மாயாண்டியை நோக்கிச் சீறிப் பாய்ந்தது. 'சடார். சடா'ரென்று விழுந்தன அடிகள். ஆனல், என்ன ஆச்சரியம்! மாயாண்டி அழவே இல்லை! அப்பாவின் மேல் பாய்ந்து அவரை நெக்கிக் கீழே தள்ளிவிட்டு வெளியே ஓடி மறைந்தான்.

கீழே விழுந்து புரண்ட அப்பா கோபம் பொறிபறக்கும் கண்களுடன் எழுந்தார். நேராக 'டெலிபோனிடம் ஓடினுர். போலீசை அழைத்தார். மாயாண்டி 'பயங்கரவாதிகள்' கூட்டத்தில் ஒருவன் என்றும்; தன்னைத் துப்பாக்கியால் சுட வந்தான் என்றும்; தான் தற்செயலாகத் தப்பித்து விட்டதாகவும்; உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சொல்லி விட்டார்.

இந்தக் குற்றச் சாட்டுகள் அன்றுமட்டுமல்ல; தினம் தினம் செய்ய ஆரம்பித்தார். நள்ளிரவில் மாடி ஏறி குதித்து குரல்வளையை நெறிக்க வருகிருன்—என்று புளுகினுர்; என் பங்களாவுக்குத் தீயிடப் போகிறேன் என அச்சுறுத்துகிருன்—என்று பதறினுர்; அரசாங்கத்தையே கவிழ்க்கஅவன் ஒரு சதிக் கூட்டத்தை உருவாக்கி விட்டான்—என்று நடித்தார்.

இவைகளை எல்லாம் கவனித்து வந்த எனக்கு வியப்பாகஇருந்தது. மாயாண்டி என்ன அவ்வளவு பயங்கர வாதியா? அவன் முகத் தோற்றம் அவனை ஒருநியாயவாதி; நீதி தவருதவன் என்று எடுத்துக் காட்டுகிறதே! மாடுபோல் வெய்யிலிலும் மழையிலும் தேயிலைத் தோட்டத்திலே உழலும் அவனுக்கு இந்தத் துரோகம் செய்யலாமா அப்பா? அவனை சாவுமுனைக்கு இழுத்துச் செல்லலாமா? என்ன கொடுமை; நன்றி மறந்த தன்மை!—என்று நானே எண்ணிக் கொண்டேன்.

❋ 10-ம் பக்கம் பார்க்க

குப்புசாமி; திருவல்லிக்கேணி

(?) சட்டசபையிலே கண்ணீர்த் துளிகள் நன்றாக மூக்கறுபடுகிறார்கள் என்று பெரியார் பேசியிருக்கிறாரே; உண்மைதானா?

சட்டசபையென்ன "முனிஸ்கபே"யா; மூக்கறுப்படுவதற்கு?

அல்லது முதன் மந்திரி வீடா?

"காமராசர் நிலையைப்பற்றி வெளியே சொல்ல வெட்கமாயிருக்கிறது; அவரை ஆதரித்து விட்டு இப்போது மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கிறேன்" என்றெல்லாம் மூக்கறுபட்ட தன்மையில் பேசிக்கொண்டிருப்பது யாரென்று பொதுமக்களுக்கே தெரியும்!

தி. மு. கழகத்தார். காங்கிரஸ் "லட்சுமணனை"க் காதலிக்கவுமில்லை; அதன் காரணமாக மூக்கறுபடவும் இல்லை!

இராசசேகரன்; சென்னை—6

(?) இந்தியை எதிர்ப்பவர்கள் தமிழுக்குப் பாதகம் செய்கிறார்கள் என்று கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறாரே; அது சரியா?

கல்விமான்யத்தின்போது காங்கிரஸ் குழந்தையம்மாள் தான் இந்திமொழி வேண்டாம் என்பது பற்றி உரையாற்றினார்கள். கல்வி அமைச்சரின் வாதப்படி தமிழுக்குத் துரோகம் அல்லது பாதகம் செய்கிறவர்கள் காங்கிரசிலும் இருக்கிறார்கள் போலும்!

அதைவிட வேடிக்கை என்னவென்றால் அமைச்சரின் பேச்சைக் கேட்டு காங்கிரஸ் உறுப்பினர்கள் கைகளைப்பலமாகத் தட்டினார்கள். அவர்களுக்கு என்ன தெரியும். தாக்கிப் பேசியது குழந்தையம்மாள் அவர்களைத்தான் என்ற உண்மை!

சர்க்கஸ்காரன், காட்சி நேரத்தில் அடங்கி நடக்காத புலி சிங்கங்களை தனியாகக் கூண்டிலே அடைத்து அதிகமாகத் தொந்திரவு செய்வானாம். அதுபோல சட்ட சபையில் உண்மையைப் பேசி விடுகிற தமிழ் உணர்ச்சி படைதத வர்கள் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் என்ன தண்டனைக்கு ஆளாகிறார்களோ; யார் கண்டது!

எல். கந்தசாமி; திருச்சி

(?) சட்ட சபையிலே வீற்றிருக்கும் காங்கிரஸ் எம். எல். ஏ.க்களைப்பற்றி உமது கருத்தென்ன?

ஒரு பத்துப் பதினைந்து பேர் தி. மு. கழகத்தின் நிழல்படுவதுகூடப் பாபம் என்று கருதுகிற 'உயர்ந்த பண்பாளர்கள்'!

பெரும்பாலான உறுப்பினர்கள் நமது கருத்திலும், நமது உறவிலும், நமது பேச்சிலும், செயலிலும் மதிப்பு வைத்திருக்கிற நல்லவர்கள்!

வேறு சிலரோ 'இரண்டுங்கெட்டான்'கள்!

தமயந்தி; சென்னை—13

(?) காங்கிரஸ் சட்ட சபைப் பெண் உறுப்பினர் ஒருவர் எதற்கெடுத்தாலும் எதிர்க் கட்சிகள் பேசும்போது "ஒழுங்குப் பிரச்சினை"யை அனாவசியமாகக் கிளப்புகிறாராமே; ஏன்?

ஆரம்பத் துடிப்பு அப்படித்தான் இருக்கும் — போகப் போகப் பக்கத்திலுள்ளவர்களைப் பார்த்து பண்பாட்டைப் பழகிக் கொள்வார்கள் என்று நம்புவோமாக!

பி. எஸ். சிவசண்முகவேல்;
காளுடுகோத்தான்

(?) சட்ட மன்றத்தில் அதிகமாக அடிபடுகிற சொற்கள் எவை?

தற்போதைக்கு, வடக்கு, தெற்கு — "லாம்", "டும்" என்பவைகளே தான்!

சேஷாத்திரி; மயிலாப்பூர்,
சென்னை—4

(?) தி. மு. கழகம் சட்டசபையில் என்ன பேசுகிறது என்பதே தெரியவில்லையே—ஏன்?

விற்பனையாகிறது!

இலட்சியக் காவியம்!

"ஐயப்படுவோரே, கேண்மின்! நாங்கள் கூறுகிறோம் என்பதனாலேயே அலட்சியம் செய்பவரே! இதோ உம்மால் மதிக்கப்படும் பேரறிவாளர் பலரும் இதனையே வலியுறுத்துவதைக் காண்மின்!" என்று அழைத்து இன்பத் திராவிடம் ஏன் வேண்டும் என்பதற்கான காரணங்களை அளித்திருக்கிற அருமையை இந்த ஏட்டிலே காணலாம்!

—அறிஞர் அண்ணா

தாய் திராவிடத்தை மீட்டிடப் புறப்பட்டிருக்கும் போர்ப்படை வரிசையின் முன்னணியில் நின்று, அறப்போர்க்களத்தில் புகத் துடித்துக்கொண்டிருக்கும் திராவிட வீரனுக்குப் புதியதொரு படைக்கலக்கருவி நூல் வடிவிலே இதோ வடித்தெடுத்துத் தரப்பட்டுள்ளது.

—நாவலர் நெடுஞ்செழியன்

மாறன், எம். ஏ. எழுதிய

"ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?"

உங்களிடமும்—மாற்றுக் கட்சித் தோழர்களிடமும் இருக்க வேண்டிய

கொள்கை விளக்கக் கையகராதி!

முத்துவேல் பதிப்பகம்,
17, மதுரை ரோடு, திருச்சி—8

நீங்கள், மித்திரன்—தினமணி ஏடுகளோடு நின்று விடுகிறீர்கள் போலும்! அவைகள் எல்லாம் இப்போது இருட்டடிப்பில் இறங்கிவிட்டன. தி. மு. கழகத்தின் சட்டசபை நடவடிக்கைகள் தெளிவாகவும் திரித்தல் இன்றியும் தெரிய வேண்டுமானால் 'நம்நாடு' தினசரி இதழைப் படித்துப் பாருங்கள்.

அண்ணா பேச்சு......

✻ 9-ம் பக்கத் தொடர்ச்சி

சார்ந்திருந்தாலும், ஏற்படும். எங்காவது ஒரு ஊரில் இது மாதிரி ஒரு அமைப்பு ஏற்படுத்தி, அதற்கு கம்யூனிஸ்ட் தோழர்களும் பணம் திரட்டுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்; அங்கேயும் எங்களை அழைத்தால் கலந்து கொள்ளுவோம்! ராமபஜனை செய்கிறவர்களும் இதிலே ஈடுபடுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்; எங்களுக்கு பஜனை பிடிக்கா விட்டாலும், எங்கள் மாபெரும் தலைவர் பெரியார் ராமசாமிக்கு ராமரே பிடிக்காவிட்டாலும், நாங்கள் அப்படிப்பட்ட இடத்திலேயும் சேர்ந்து இப்படிப்பட்ட அறிவாலயம் திறந்திட நிச்சயம் பணியாற்றுவோம்.

ஏனென்றால் எங்களைப் பலர் பகைவர்கள் என்று கூறுகிறார்களே தவிர, தூய உள்ளத்தோடு நான் சொல்லுகிறேன்; நாங்கள் யாரையும் பகைவர்களாகக் கருதவில்லை! எங்கள் பகைவர் நான்குபேர்தான்! ஒன்று அறியாமை— இரண்டாவது மூடநம்பிக்கை — அடுத்தது வறுமை — இறுதியில் அடிமைத்தனம்! மற்றவர்கள் எல்லாம் எங்களுக்குப் பகைவர்கள் அல்ல; எங்களோடு சேராதவர்கள்; அல்லது எங்களிடமிருந்து பிரிந்து நிற்பவர்கள்; இன்னும் சில பேர் எங்களோடு இருந்து பிறகு பிரிந்து ஒதுங்கி நிற்பவர்கள்!

இப்படித்தான் இருக்கிறார்களே தவிர, எங்களுக்குப் பகைவர்களே கிடையாது. ஆகவே நாங்கள் இத்தகைய அறிவாலய அமைப்பு விழாக்களில் கலந்து கொள்வதைக் கடமையாகவும் பெருமையாகவும் கருதுகிறோம்!

இந்தத் தஞ்சை மாவட்டத்தில்— நல்ல இயற்கை யறிவு பல்வேறு துறைகளிலே பரவி இருக்கின்ற மாவட்டத்தில்— கட்டாய ஆரம்பக் கல்வி வெற்றிகரமாவதற்கு இது போன்ற பள்ளிகள் நிறுவ பலரும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த விழாவிலே கலந்து கொண்ட எனக்கு ஊராட்சி மன்றத்தின் சார்பிலும், பாதுகாப்புச் சங்கத்தின் சார்பிலும், தனிப்பட்ட நண்பர்களும் மாலைகளை அணிவித்து அன்பைக் காட்டியதற்காக நன்றி தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன், வணக்கம்!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6 தமிழ்நாடு